# சேவா வாணி

## மே - 2026



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

சுதந்திரம் என்பது வெளிப்புறச் சார்புகளிலிருந்து விடுதலை பெறுவதைக் குறிக்கிறது. யார் ஒருவன் மற்றொரு மனிதர், பொருள் அல்லது சூழ்நிலையின் உதவியை நாடுகிறானோ, அவன் அவற்றிற்கே அடிமையாகிறான்.

நிலையற்ற இந்த மனித வாழ்வின் இயல்பே பரஸ்பர உறவுகளையும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதும் தான். அதனால், பூமியில் எந்த மனிதனுக்கும் முழுமையான சுதந்திரம் கிடைப்பதில்லை.

ஒருவரின் தேவைகள் எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமான சுதந்திரம் அவருக்குக் கிடைக்கும். எனவே, முழுமையான சுதந்திரம் என்பது எவ்வித ஆசைகளும் முற்றிலும் இல்லாத நிலையாகும்.

**- பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா**

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம், தமிழ்நாடு தெற்கில் இருந்து **3** பிரிவுகளிலும் மொத்தம் **80** தனித்துவமான செயல்பாடுகள் **மே 2026** நடந்தன

| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு | கல்விப் பிரிவு |
|---|---|---|
| 29 | 37 | 14 |

# பொருளடக்கம்


தமிழ்நாடு தெற்கு ..... 5

ஈரோடு ..... 7

கரூர் ..... 24

கன்னியாகுமரி ..... 27

காஞ்சிபுரம் தெற்கு ..... 31

காஞ்சிபுரம் வடக்கு ..... 51

தருமபுரி/கிருஷ்ணகிரி ..... 69

கோயம்புத்தூர் ..... 75

சேலம் ..... 91

தஞ்சாவூர் ..... 93

திண்டுக்கல் ..... 100

திருச்சி ..... 105

திருப்பூர் ..... 110

தூத்துக்குடி ..... 121

தேனி ..... 123

விருதுநகர் ..... 126

# SAI IAS – தலைமைத்துவம் மற்றும் வேலை வாய்ப்புப் பயிற்சிப் பட்டறை

தமிழ்நாடு தெற்கு

01.05.2026 | 36 சேவாதளத்தொண்டர்கள்

மதுரை ஸ்ரீ சத்ய சாய் ஆனந்த நிலையத்தில் மே 1ஆம் தேதி லிஃப்ட் மற்றும் கேட்டலிஸ்ட் (LIFT & Catalyst) தலைமைத்துவம் மற்றும் வேலை வாய்ப்புப் பயிற்றுநர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இப்பயிற்சியின் போது சிறந்த பேச்சாளர்களுக்கான பயிற்சியும், ஸ்ரீ சத்ய சாய் தலைமைத்துவத்திற்கான மகா வாக்கியத்தைத் தழுவிய 'சாயி ஐஏஎஸ்' (SAI IAS) என்ற தலைப்பிலான பயிற்சியும் அளிக்கப்பட்டன. மேலும், செயல்முறைகள் மற்றும் விளையாட்டுகள் மூலம் தலைமைத்துவப் பண்பினை வளர்க்கக்கூடிய பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வினை மதுரை மாவட்டத் தலைவரும் தலைமைப் பயிற்றுநருமான திரு. நாராயணசாமி அவர்களும், அவரது வழிகாட்டுதலில் லிஃப்ட் மற்றும் கேட்டலிஸ்ட் இளைஞர் குழுவைச் சேர்ந்த பயிற்றுநர்களும் நடத்தினர். இதில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 36 இளைஞர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.





# சிறப்பு பஜன்

ஈரோடு 01.05.2026

சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு 1.5.2026 வெள்ளிக்கிழமை அன்று ஈரோடு கவுண்டன்புதூர் சமிதியில் உள்ள திரு. மனோகர் அவர்களின் சிவன் கோவிலில் சிறப்புப் பஜனை நடைபெற்றது.

காலை 11 மணி முதல் மதியம் 12 மணி வரை நடந்த இந்தச் சிறப்புப் பஜனைக்குப் பின்னர், மாவட்டத்தலைவர் திரு. அண்ணாமலை அவர்கள் ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

அவரைத் தொடர்ந்து, சித்தோடு சமிதியின் திரு. ஸ்ரீராம் அவர்கள் பகவானின் அவதார மகிமையைப் பற்றி எடுத்துரைத்தார்.

தொடர்ந்து திருமதி நித்யா மற்றும் திருமதி காயத்ரி ஆகியோர் பர்த்தி யாத்திரை பற்றிய தங்களின் அனுபவங்களை விவரித்தனர்.

இந்நிகழ்ச்சியில் திரளானோர் கலந்துகொண்டனர். நிறைவாக, அனைவருக்கும் பகவானின் பிரசாதம் வழங்கப்பட்டது.





# பிரசாந்தி சேவை

ஈரோடு | 05.05.2026 | 120 சேவாதளத்தொண்டர்கள்

ஈரோடு மாவட்டத்தில் இருந்து புட்டபர்த்தி பிரசாந்தி நிலயத்தில் சேவை புரிவதற்காக, இரண்டாம் குழுவாக மே மாதம் 5.5.2026 அன்று சாய் அன்பர்கள் சென்றனர்.

இதில் 72 மகிளா அன்பர்களும், 48 ஆண்கள் என மொத்தம் 120 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு புட்டபர்த்தியில் சேவை புரிந்து தங்களை ஆன்மீகச் சாதனையில் ஈடுபடுத்திக் கொண்டனர். இந்த வாய்ப்பை ஈரோடு அன்பர்களுக்கு வழங்கிய சாய் நாதனுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.





# அன்னை ஈஸ்வரம்மா தின விழா

ஈரோடு 06.06.2026

அன்னை ஈஸ்வரம்மாள் தினத்தை முன்னிட்டு ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சமிதிகளிலும் நகர சங்கீர்த்தனம், வேதம், ஸ்ரீ ருத்ரம், சிறப்புப் பஜனை, மகா நாராயண சேவை, குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், அஷ்டோத்திரம், பாலவிகாஸ் குழந்தைகளின் உரை மற்றும் பாத பூஜை ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

இவ்விழா காந்தி நகர், மூலப்பாளையம், ஈரோடு கிழக்கு, கவுண்டன்புதூர், முத்துக்காளிமடை, பவானி, பழனிபுரம், சித்தோடு, பாலாஜி கார்டன், சத்தியமங்கலம், அந்தியூர் உள்ளிட்ட பல சமிதிகளிலும் நடைபெற்றது. காலையில் தொடங்கிய நிகழ்ச்சிகள் மதியம் நாராயண சேவையுடன் நிறைவு பெற்றன. மாலையில் சிறப்புப் பஜனை நடைபெற்றது.

இதன் முத்தாய்ப்பாக, புட்டபர்த்தியில் உள்ள அன்னை ஈஸ்வரம்மாளின் சமாதியில் கோலம் போடும் வாய்ப்பு ஈரோடு மாவட்டச் சேவாதளத்தொண்டர்களுக்குக் கிடைத்தது. திருமதி கீதா, திருமதி ஜமுனா ராணி, திருமதி சித்ரா, திருமதி மாரியம்மாள் ஆகியோருக்குக் கிடைத்த இப்பேறு, மாவட்டத்திற்கே கிடைத்த பெருமையாக அமைந்தது. இவ்வாய்ப்பை அருளிய சுவாமிக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.



PERIYAR GOVERNMENT DISTRICT HEAD QUARTERS
SPECIALITY HOSPITAL & DNB POST GRADUATE




# இலவச மருத்துவ முகாம்

ஈரோடு | 16.05.2026 | 20 பயனாளிகள்

ஈரோடு கிழக்கு சமிதி சார்பாக 16.5.2026 அன்று தீரன் நகர் பாபா கோவிலில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

மருத்துவர் உஷா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், 20-க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



# பஜனைப் பயிற்சி முகாம்

ஈரோடு | 17.05.2026 | 45 சேவாதளத்தொண்டர்கள்

ஈரோடு கிழக்கு சமிதியின் சார்பில் 17.5.2026 அன்று காலை 9:45 மணி முதல் மதியம் 1:30 மணி வரை, 55ஆவது ஆன்லைன் பயிற்சி முகாம் நேரடிப் பஜனைப் பயிற்சி முகாமாக நடைபெற்றது.

இம்முகாமில், பஜனைகளில் பாடகர்கள் பின்பற்ற வேண்டிய முறைகள் மற்றும் ஸ்ருதி மாறாமல் பாடுவது எப்படி என்பது பற்றி விளக்கிக் கூறப்பட்டது.

இதில் 8 ஆண்கள், 33 மகிளா அன்பர்கள், 2 குழந்தைகள் மற்றும் 2 பார்வையாளர்கள் என மொத்தம் 45 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இவ்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த பகவானுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.





# கிராம சேவை ஒருங்கிணைப்பாளர் கூட்டம்

ஈரோடு | 17.05.2026 | 28 சேவாதளத்தொண்டர்கள்

சித்தோடு ஸ்ரீ சத்யசாயி மெட்ரிக் பள்ளியில் 17.5.2026 அன்று தேசிய கிராமசேவை ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜேந்திரன் அவர்களின் தலைமையில் காந்திநகர் சமிதி பொறுப்பாளர்கள் மற்றும் குருமார்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அகில இந்திய அளவில் 6,000 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், நமது ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 25 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

இக்கூட்டத்தில், தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள பஜனை மண்டலிகளில் மாதம் ஒருமுறை பஜனை நடத்துதல், பாலவிகாஸ் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல், குருமார்களுக்குப் பயிற்சி அளித்தல், குடியிருப்புப் பகுதிகளில் (Residential) பாலவிகாஸ் வகுப்புகளை அதிகரித்தல், கிராமப்புற மாணவர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குதல் மற்றும் நாராயண சேவை போன்றவை குறித்து விவாதிக்கப்பட்டன.

மேலும், அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இளைஞர்களுக்குக் கணினி

பயிற்சி போன்ற நற்செயல்கள் கிடைக்க உதவி செய்தல், அதிக அளவில் மரக்கன்றுகள் நடுதல், கோவில் உழவாரப்பணி மற்றும் திருவிழாக் காலங்களில் கிராம மக்களுடன் இணைந்து பணியாற்றுதல் ஆகிய செயல்பாடுகள் செய்தல் வேண்டும் எனப் பரிந்துரைத்தார்.

இதில் 11 ஆண்கள், 17 மகிளா அன்பர்கள் கலந்துகொண்டனர். நிறைவாக, அனைவருக்கும் சுவாமியின் பிரசாதம் வழங்கப்பட்டது.

# உழவாரப்பணி

ஈரோடு | 20.05.2026 | 12 சேவாதளத்தொண்டர்கள்

ஈரோடு மாவட்டம் பாலாஜி கார்டனில் உள்ள ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் 20.5.2026 அன்று பகவானின் ஆசிகளோடு சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் நமது சாய் அன்பர்கள் 12 பேர் நாராயண சேவையில் கலந்துகொண்டு சேவை புரிந்தனர். இவ்வாய்ப்பை அளித்த சாய் நாதனுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்



# தினந்தோறும் நகர சங்கீர்த்தனம்

ஈரோடு 20.05.2026

ஈரோட்டில் உள்ள சில சமிதிகளில் தினந்தோறும் நகர சங்கீர்த்தனம் நடைபெறுகிறது. அவற்றுள் மூலப்பாளையம் சமிதியும் ஒன்றாகும்.

இச்சமிதியைச் சேர்ந்த அன்பர்கள் பாரதிநகரில் உள்ள விநாயகர் கோவிலில் தொடங்கி, அப்பகுதி வழியாகப் பஜனை செய்து வந்து மீண்டும் கோவிலிலேயே விநாயகருக்கு மங்கள ஆரத்தி எடுத்து நிறைவு செய்கிறார்கள்.

அவ்வகையில் 20.5.2026 புதன்கிழமை அன்று நடைபெற்ற நகர சங்கீர்த்தனத்தில் 4 ஆண்கள், 4 மகிளா அன்பர்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# ஈரோடு மாவட்ட பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

ஈரோடு | 24.05.2026 | 99 சேவாதளத்தொண்டர்கள்

ஈரோடு மாவட்டத்தின் அனைத்துச் சமிதி ஒருங்கிணைப்பாளர்கள் (Conveners), மூன்று பிரிவுகளின் மாவட்டப் பொறுப்பாளர்கள், இளைஞர் பொறுப்பாளர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் 24.5.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. இக்கூட்டம் காலை 10 மணிக்குத் தொடங்கி, மதியம் 12:30 மணிக்கு மகா மங்கள ஆரத்தியுடன் சித்தோடு ஸ்ரீ சத்ய சாயி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நிறைவுற்றது.

இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்டத்தின் 20ஆம் ஆண்டு சாதனா முகாம், 6ஆம் ஆண்டு பர்த்தி யாத்திரை மற்றும் மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விரிவாகக் கலந்தாலோசனை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் சமிதிப் பொறுப்பாளர்கள் 54 ஆண்கள், 45 மகிளா அன்பர்கள் கலந்துகொண்டனர். மேலும், 15 ஆண்கள் மற்றும் 25 பெண் உறுப்பினர்களும் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். வந்திருந்த அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது.





# 20-ஆம் ஆண்டு சாதனா முகாம்

ஈரோடு 31.05.2026

ஈரோடு மாவட்டத்தில் 20-ம் ஆண்டு சாதனா முகாம் 31.5 2026-ல் நடைபெற்றது. இந்த முகாமினை முன்னாள் இந்நாள் பாலவிகாஸ் மாணவர்கள் மற்றும் முன்னாள் சாயி பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று சேர்ந்து நடத்தியது குறிப்பிடத்தக்கது.

நம் சாயி மாதாவும் தன் குடையின் கீழ் வந்த அனைவரும் தொடர்ந்து சேவை புரிந்து ஆன்மீக சாதனையில் முன்னேறுவதையே விரும்பி ஆசீர்வதிப்பார் என்பதில் ஐயமில்லை.

மூலப்பாளையத்தில் உள்ள ஏ.ஆர்.ஆர் கல்யாண மண்டபத்தில் 20-ஆம் ஆண்டு சாதனா முகாம் நடைபெற்றது. காலை ஓம்காரம் சுப்ரபாதம் தொடங்கி நகர சங்கீர்த்தனம் செய்து அந்த இடத்தை புனித அதிர்வுகள் நிரம்பிய இடமாகச் செய்தனர்.

மாவட்ட சேவை ஒருங்கிணைப்பாளர் திரு ஜெயச்சந்திரன் பிரசாந்தி கொடியை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து திரு சாய் பிரசாத் மற்றும் செல்வி சத்ய பிரியதர்ஷினி குழுவினர் சாயி பஜனை செய்தனர். பல்வேறு சமிதிகளைச் சேர்ந்த மஹிளாக்கள் குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை

தொடங்கி வைத்தனர். வேத கோஷத்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் ஸ்ரீ சத்யசாய் பிரார்த்தனையை அனைவரும் சேர்ந்து செய்தனர். பகவானின் தெய்வீக உரையை தொடர்ந்து பால விகாஸ் மாணவிகள் மாணிக்கவாசகரின் திருத்தொண்டர் தொகையை அழகாக பாடினார்கள்.

மஹிளா அன்பர்கள் "சாயி பஜனாம்ருதம்" என்ற தலைப்பில் பல பஜன் பாடல்களைப் பாடினர். கேட்பதற்கு இனிமையாக இருந்தது. மாவட்ட தலைவர் திரு அண்ணாமலை அவர்கள் இருபதாம் ஆண்டு சாதனா முகாம் குடும்ப நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார்.

மாவட்ட சாதனா முகாம் மற்றும் பர்த்தியாத்ரா ஒருங்கிணைப்பாளர் திரு பிரகாஷ் இருபதாவது சாதனா முகாமை தொடர்ந்து ஆறாவது பர்த்தி யாத்ரா ஜூன் 20, 21ஆம் தேதி நடைபெற இருப்பதை பற்றி உரையாற்றினார். "அனந்தரூபம் ஏக தத்துவம்" என்ற தலைப்பில் முன்னாள் பாலவிகாஸ் மாணவிகள் இந்நாள் குருமார்களாக சாய் பாதையில் சென்று கொண்டு இருப்பவர்கள் மனதை ஈர்க்கும் வகையில் சிறந்த இசை நிகழ்ச்சியை வழங்கினார்கள்.

இவர்களின் இசைக்கு மெருகேற்ற அனைத்து வாத்தியங்களையும் வாசித்த சாயி இளைஞர்கள் தங்கள் திறனை திறம்பட வெளிப்படுத்தி இசை நிகழ்ச்சியை சிறப்பாக வழங்கினர். இந்த நிகழ்ச்சியை சாயி குல்வந்த் ஹாலில் வழங்க இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களைத் தொடர்ந்து 'சொல்லிய வண்ணம் செய்த சாயி பெருமாள்' என்ற நாடகத்தை திரு செல்லதுரை தலைமையில்

பாலவிகாஸ் மாணவச் செல்வங்கள் மிக அழகாக நடித்துக் காட்டினர். இந்த நிகழ்ச்சி இவ்வளவு அருமையாக நடக்க பின்னால் இருந்து செயல்பட்ட பாலவிகாஸ் குருமார்கள், சேவாதள தொண்டர்கள், மூத்த உறுப்பினர்கள் என அனைவரின் உழைப்பும் பாராட்டத்தக்கது.

மதியம் உணவிற்கு பின் முன்னாள் மூத்த பாலவிகாஸ் மாணவரும் மற்றும் குருவுமான திரு கருப்பையா சிறப்புரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து மாவட்ட கலைத்துறை ஒருங்கிணைப்பாளர் மற்றும் முன்னாள் சாயி பல்கலைக்கழக மாணவரான திரு விஜய் பாலாஜி உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து முன்னாள் சாயி அனந்தபூர் மாணவியும் மாவட்ட மஹிளா பஜன் ஒருங்கிணைப்பாளருமான குமாரி சத்திய பிரியதர்ஷினி பஜனின் முக்கியத்துவம் பற்றி பேசினார். மாவட்ட முன்னாள் பாலவிகாஸ் ஒருங்கிணைப்பாளர் திரு சரவணகுமார் ஈரோடு பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள் தொடர்ந்து இருபதாவது முறையாக ஈரோடு குடும்ப சாதனா முகாமை சிறப்பாக நடத்தி வருவதாகவும் இதைத்தொடர்ந்து எடுத்து செல்ல சுவாமியின் ஆசிகளை வேண்டிக் கொண்டார்.

மாநில கிராம ஒருங்கிணைப்பாளர் திரு ராஜேந்திரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். சேவையின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துக் கூறினார்.

திருமதி சஹானா ரகுராம் குருவாக இருந்து பாலவிகாஸ் குழந்தைகளை ஆறு குழுக்களாக பிரித்து ஒவ்வொரு

குழுவிலும் 15 மாணவிகளுக்கும் குறையாமல் நடன பயிற்சி வழங்கினார்.

ஆறு குழுக்களையும் சேர்த்து 6 நாட்டியங்களாக அறுபடை வீடு காட்டும் அருட்பாதை, அனைவரையும் நேசி, அனைவருக்கும் தொண்டு செய் என்ற தலைப்பில் சிறந்த நாட்டிய நாடகத்தை அரங்கேற்றி சாயின் சேவையில் ஈடுபடுத்திக் கொண்டால் அவர் நம்மை எந்த எல்லைக்கும் நடத்தி செல்வார் என்பதை அனைவரும் உணரும்படி செய்தார்.

ஆம் பர்த்தியில் இந்த நாட்டியத்தை பார்த்து ஈரோடு மாவட்டம் சிறந்த பெயரைப் பெறப்போகிறது என்பதில் ஐயமில்லை. நிறைவாக தமிழ்நாடு மாநில தலைவர் திரு கே.ஆர்.சுரேஷ் அவர்கள் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து பதினெட்டாவது வருடமாக ஈரோடு சாதனா முகாமில் கலந்துகொள்ளும் வாய்ப்பினையும் தொடர்ந்து ஆறாவது முறையாக பர்த்தியாத்திரை மற்றும் சாயி குல்வந்த் ஹாலில் கலை நிகழ்ச்சி செய்து வரும் ஈரோடு சாயி அன்பர்களை பாராட்டினார்.

இதனை தொடர்ந்து மங்களஹாரத்தி எடுக்கப்பட்டு பகவானின் பிரசாதத்தை வந்திருந்த அனைவருக்கும் வழங்கி நிகழ்ச்சி நிறைவடைந்தது. சுமார் 800க்கும் மேற்பட்ட சாயி அன்பர்கள் இந்த குடும்ப சாதனா முகாமில் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

# நீர்மோர் சேவை

## கரூர்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திவ்ய அருளாசியுடன், 01.05.2026 முதல் 31.05.2026 வரை நடைபெற்ற நீர்மோர் சேவை அனைத்து அன்பர்களின் ஒத்துழைப்பு, பங்களிப்பு மற்றும் பங்கேற்புடன் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

கோடைகாலத்தில் பொதுமக்களின் தாகத்தைத் தணிக்கும் நோக்கில் நடைபெற்ற இந்தச் சேவையில், தினமும் பக்தி உணர்வுடனும் அன்புடனும் நீர்மோர் வழங்கப்பட்டது. இச்சேவையின் மூலம் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்றனர்.





# ஸ்ரீ ருத்ரம் பாராயணம்

கரூர் 31.05.2026

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திவ்ய அருளாசியுடன், 31.05.2026 அன்று கரூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா அமைப்பினரால் மகாபெரியவா காஞ்சி மடத்தில் ஸ்ரீ ருத்ர பாராயணம் பக்திபூர்வமாக நடத்தப்பட்டது.

இந்த ஆன்மிக நிகழ்வில் அன்பர்கள் மற்றும் சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு ஸ்ரீ ருத்ர பாராயணத்தைப் பக்தி உணர்வுடன் மேற்கொண்டனர். நிகழ்ச்சி முழுவதும் வேத மந்திரங்களின் புனித ஒலி நிரம்பியது.



# உழவாரப்பணி மற்றும் நாராயண சேவை

## கரூர்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திவ்ய அருளாசியுடன், 24.05.2026 அன்று கரூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா அமைப்பினரால் உழவாரப்பணி, குழந்தைகளுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் நாராயண சேவை ஆகியவை பக்திபூர்வமாக நடத்தப்பட்டன.

இச்சேவையின் ஒரு பகுதியாகக் கோவில் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் சுத்தம் செய்யப்பட்டு உழவாரப்பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், குழந்தைகளுக்குப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அவர்களுக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் அளிக்கப்பட்டன. தொடர்ந்து, நாராயண சேவையின் மூலம் தேவையுடையவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.





# தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா தின விழா

கன்னியாகுமரி | 06.05.2026 | 75 பயனாளிகள்

கன்னியாகுமரி மாவட்ட ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் சார்பில் 06.05.2026 புதன்கிழமை அன்று அன்னை ஈஸ்வரம்மா தின விழா சமிதிகளில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாகர்கோவில் சமிதியில் காலை 05:04 மணிக்கும், குலசேகரன்புதூர் சமிதியில் காலை 05:20 மணிக்கும் ஓம்காரம், சுப்ரபாதத்தைத் தொடர்ந்து நகரசங்கீர்த்தனம் நடைபெற்றது.

இதன்பின், அன்பர்கள் அனைவரும் வல்லன்குமாரவிளை சமிதியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான ஈஸ்வரம்மா தின விழாவில் கலந்துகொண்டனர். காலை 05:04 மணிக்கு ஓம்காரம் மற்றும் சுப்ரபாதத்துடன் தொடங்கிய இந்நிகழ்வில், நகரசங்கீர்த்தனம் நடைபெற்றது. காலை 09:00 மணிக்கு அன்னை ஈஸ்வரம்மாவின் தெய்வீகப் புகழைப் பாடும் சிறப்புப் பஜனை நடைபெற்றது.

காலை 09:30 மணி முதல் நண்பகல் 01:30 மணி வரை விழாவின் சிகரமாகப் பாலவிகாஸ் குழந்தைகளின் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நான்கு மணி நேரம் குழந்தைகள் வெளிப்படுத்திய பக்தித் திறமைகளும் மழலைச் சிரிப்பும் காண்போரைக் களிப்படையச் செய்தன. மதியம் 01:30 மணி

முதல் 02:30 மணி வரை நாராயண சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மதியம் 02:30 மணி முதல் 03:30 மணி வரை பெற்றோருக்குக் குழந்தைகள் செய்த பாத பூஜை, பெற்றோரின் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்த தெய்வீகத் தருணமாக அமைந்தது. மாலை 03:30 மணிக்கு வினாடி-வினா போட்டிகளில் வென்ற பாலவிகாஸ் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 04:00 மணிக்கு பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி சமர்ப்பிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

இந்நிகழ்ச்சிகளில் 28 பாலவிகாஸ் குழந்தைகள், 15 பெற்றோர்கள், 5 இளைஞர்கள், 5 பாலவிகாஸ் குருமார்கள் உட்பட மொத்தம் 75 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





# இலவசக் கண் பரிசோதனை முகாம்

**கன்னியாகுமரி**

**221 பயனாளிகள்** **30 சேவாதளத்தொண்டர்கள்**

கன்னியாகுமரி மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் சார்பில் 03.05.2026 அன்று வடசேரி எஸ்.எம்.ஆர்.வி (S.M.R.V) மேல்நிலைப் பள்ளியில் இலவசக் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து நடத்தப்பட்ட இம்முகாமில் 221 பயனாளிகள் கலந்துகொண்டு கண் பரிசோதனைகளைச் செய்துகொண்டனர்.

அவர்களில் கண்புரை அறுவைசிகிச்சைக்குத் தகுதியான 99 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, அன்றைய தினமே மேற்சிகிச்சைக்காகத் திருநெல்வேலிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். முகாமிற்கு வருகை தந்த பயனாளிகள் அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது.

இப்பணியில் 30 சேவாதளத்தொண்டர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சேவை புரிந்தனர். மதியம் 02:30 மணியளவில் மங்கள ஆரத்தியுடன் இச்சேவை முகாம் இனிதே நிறைவுற்றது.





# கோடைகாலச் சிறப்பு முகாம்கள்

**காஞ்சிபுரம் தெற்கு** **01-06.05.2026 & 11-13.05.2026**
**109 பயனாளிகள்**

காஞ்சி தெற்கு பார்வதி நகர் சமிதியில் கோடைகால முகாம் மே மாதத்தில் நடைபெற்றது. இம்முகாமில் யோகா, கைவினைப் பயிற்சிகள் மற்றும் மதிப்பீட்டு விளையாட்டுகள் (Value Games) மூலம் நல்லொழுக்கக் கல்வி ஆகியவை வழங்கப்பட்டன.

முகாமின் இறுதி நாளில் ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டுப் பக்திபூர்வமான மாத்ரு பூஜை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை 8 குருமார்களும், 6 பாலவிகாஸ் குரூப்-3 மாணவிகளும் இணைந்து நடத்தினர். இதில் 18 மாணவிகளும், 15 மாணவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

காஞ்சி கலெக்டரேட் சமிதி சார்பில், லக்ஷ்மி குளோபல் பள்ளி நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் மே 1 முதல் மே 5 வரை (4 நாட்கள்) கோடைகாலச் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் 51 குழந்தைகள் பங்கேற்றனர். இறுதி நாளில் நடைபெற்ற மாத்ரு பூஜையில் 16 பெற்றோர்கள் கலந்துகொண்டனர். முகாமினை 11 குருமார்கள் வழிநடத்தினர். பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும்

சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கூடுவாஞ்சேரி சமிதிக்குட்பட்ட காயரம்பேடு பஜனை மண்டலியின் வீனஸ் நகர் மையத்தில் 11.05.2026 அன்று கோடைகாலப் பயிற்சி முகாம் நடைபெற்றது. மையத்தின் குரு திருமதி. ராஜேவரி சாய்ராம் வரவேற்புரை வழங்கினார்.

தொழில்முறை யோகா ஆசிரியையும் முன்னாள் பாலவிகாஸ் மாணவியுமான திருமதி. புவனேஸ்வரி சாய்ராம், குழந்தைகளுக்குச் சுவாச நுட்பங்கள், மூட்டுப் பயிற்சிகள், சூரிய நமஸ்காரம் மற்றும் எளிய ஆசனங்களைக் கற்றுக்கொடுத்தார். மேலும், புத்திக்கூர்மை விளையாட்டுகளையும் பயிற்றுவித்தார்.

தொடர்ந்து, குருமார்கள் செல்வி. ஷாலினி சாய்ராம் மற்றும் செல்வி. பூஜா சாய்ராம் ஆகியோர் குழந்தைகளுக்கு ஓவியப் பயிற்சி அளித்தனர். சமிதி ஒருங்கிணைப்பாளர் திரு. சபேசன் சாய்ராம், இக்கோடை முகாமின் நன்மைகள் குறித்து உரையாற்றி குழந்தைகளை ஊக்கப்படுத்தினார்.



AUMSRISAIRAM




# முதியோர் இல்லத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள்

காஞ்சிபுரம் தெற்கு | 06.05.2026 | 50 பயனாளிகள்

தாம்பரம் சமிதி சார்பாக அன்னை ஈஸ்வரம்மா தினத்தன்று, குரோம்பேட்டையில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

வேதபாராயணத்துடன் தொடங்கிய இந்நிகழ்ச்சியில் சிறப்புப் பஜனை நடைபெற்றது. முதியோர் இல்லத்தில் இருந்த முதியவர்கள் அனைவரும் பாலவிகாஸ் குழந்தைகளின் பஜனைகளைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியுற்றதோடு, குழந்தைகளைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வில் பாலவிகாஸ் மாணவ, மாணவிகள் 10 பேரும், 2 குருமார்களும், 7 பெற்றோர்களும் கலந்துகொண்டனர். மகா மங்கள ஆரத்தியுடன் நிறைவு பெற்ற இந்த நிகழ்வில், அங்கிருந்த அனைவருக்கும் சுவாமியின் பிரசாதம் வழங்கப்பட்டது.





# நீர்மோர் விநியோகம்

காஞ்சிபுரம் தெற்கு | 05.06.2026 | 1200 பயனாளிகள்

காஞ்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சமிதிகளின் சார்பாக அன்னை ஈஸ்வரம்மா தினத்தை ஒட்டிப் பல நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாகப் பொதுமக்களுக்கு நீர்மோர் விநியோகம் செய்யப்பட்டது. இச்சேவையில் பல பாலவிகாஸ் மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். பொதுமக்கள் பலர் மகிழ்ச்சியுடன் நீர்மோர் அருந்திப் பயனடைந்தனர்.





# இலவசக் கண் மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு | 31.05.2026 | 45 பயனாளிகள் | 7 சேவாதளத்தொண்டர்கள்

செங்கல்பட்டு சமிதி மற்றும் பம்மல் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவசக் கண் மருத்துவ முகாம் 31.05.2026 அன்று செங்கல்பட்டு சமிதி வளாகத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் 25 பயனாளிகள் கலந்துகொண்டு கண் பரிசோதனை செய்துகொண்டனர். அவர்களில் கண்புரை அறுவைசிகிச்சைக்குத் தகுதியான 21 நபர்கள் கண்டறியப்பட்டு மேற்சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இப்பணியில் 7 சேவாதளத்தொண்டர்கள் முகாமிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தனர். மேலும், முகாமிற்கு வருகை தந்த பயனாளிகள் மற்றும் பணியாளர்கள் என மொத்தம் 45 நபர்களுக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. 7 குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து இச்சேவையினை மேற்கொண்டனர்.


ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி
ஸ்ரீ சத்ய சாய் சமுதாய மையம்
செங்கல்பட்டு
மாலை 6.00 மணி முதல் 6.45 மணி வரை பஜனை நடைபெறும்
இலவச கண்புரை அறுவை சிகிச்சை முகாம்
பிரதி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில்
காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறும்



# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

காஞ்சிபுரம் தெற்கு | அனைத்துச் சனிக்கிழமைகளும் | 125 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் 'இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்' என்ற திட்டத்தின் கீழ், அன்பர்களின் இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் வேதபாராயணம் மற்றும் பஜனை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன. இதன் மூலம் ஆன்மிக அதிர்வுகள் பலரின் இல்லங்களைச் சென்றடைகின்றன.

இதன் ஒரு பகுதியாக, தாம்பரம் சமிதி சார்பில் மாதத்தின் அனைத்துச் சனிக்கிழமைகளிலும் உறுப்பினர்களின் இல்லங்களில் ஸ்ரீ ருத்ர பாராயணமும், அதனைத் தொடர்ந்து பஜனையும் நடைபெறுகின்றன. இதுவரை மொத்தம் 146 இடங்களில் இந்நிகழ்வுகள் பக்திப்பூர்வமாக நடத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 100 அன்பர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும், பெருங்களத்தூர் சமிதியின் சார்பாக 21.05.2026 அன்று மூத்த சாய் அன்பர் ஒருவரின் இல்லத்தில் சிறப்புப் பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது.





# இணையவழி சாயி இலக்கியப் பாராயணம்

## காஞ்சிபுரம் தெற்கு

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அருளிய ‘ஒன்பது நன்னடத்தை விதிகளின்’ ஒரு பகுதியாக, சாயி இலக்கியங்களைப் படிப்பதை ஊக்கப்படுத்தும் வகையில் தாம்பரம் சமிதி சார்பில் இணையவழி (Online) வாயிலாகச் சாயி இலக்கியப் பாராயண வகுப்புகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்தொடரில் ராமகதா ரச வாஹினி, பாகவத வாஹினி, தர்ம வாஹினி உள்ளிட்ட ஒன்பது வாஹினி நூல்களின் வாசிப்பு, சாய் சின்னகதா, ‘இறைவனுடன் இனிய அனுபவங்கள்’, சத்தியோபனிஷத் மற்றும் சனாதன சாரதி ஆகிய நூல்களின் வாசிப்பு எனப் பல செயல்பாடுகள் நடைபெற்றன. மேலும், உலக அமைதி வேண்டித் தினமும் சாயி காயத்ரி மந்திரம் மற்றும் லோக க்ஷேம மந்திரம் ஆகியன பாராயணம் செய்யப்படுகின்றன.

இதில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் எனத் தினசரி சராசரியாக 30 பேர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு ஆன்மிக அறிவைப் பெற்று வருகின்றனர்.

# சாயி புரதச்சத்து மாவு வழங்கும் சேவை

**காஞ்சிபுரம் தெற்கு**

**182 பயனாளிகள்** **30 சேவாதளத்தொண்டர்கள்**

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் இணைந்து, மக்களின் உடல் நலனை மேம்படுத்தும் நோக்கில் ‘சாயி புரதச்சத்து மாவு’ விநியோகச் சேவையைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன.

பெருங்களத்தூர் சமிதி உறுப்பினர்களால் தரம்மிக்க மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சத்து மாவுப் பொட்டலங்கள் 09.05.2026 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் 70 பேருக்கும், தாம்பரம் சானடோரியம் காசநோய் மருத்துவமனையில் 62 பேருக்கும் வழங்கப்பட்டன.

கிராமப்புறச் சத்துமாவு விநியோகம் பார்வதி நகர் சமிதியின் திறன் மேம்பாட்டுத் திட்ட முன்னாள் மாணவிகளால் தரம்மிக்க மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சத்து மாவுப் பொட்டலங்கள் 25.05.2026 அன்று செரப்பணஞ்சேரி கிராமத்தில் உள்ள 50 பேருக்கு வழங்கப்பட்டன.

இப்பணிகளில் மொத்தம் 30 சேவாதளத்தொண்டர்கள் ஈடுபட்டு, 182 பயனாளிகளுக்குச் சத்துணவு வழங்கிச் சேவை புரிந்தனர்.





# சிறப்பு நாராயண சேவை

காஞ்சிபுரம் தெற்கு

154 பயனாளிகள்

20 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் சார்பில் மாதந்தோறும் நாராயண சேவை பக்திப்பூர்வமாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, 03.05.2026 மற்றும் 10.05.2026 ஆகிய தினங்களில் கூடுவாஞ்சேரி சமிதி மற்றும் காயரம்பேடு பஜனை மண்டலி இணைந்து சுமார் 154 நபர்களுக்கு நாராயண சேவை வழங்கின. இப்பணியில் 15 சாய் குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள், சாய் அன்பர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் ஒன்றிணைந்து உணவைத் தயாரித்துத் தங்களின் அன்பான சேவையினை வழங்கினர். பகவானின் அருளால் இந்த நாராயண சேவை இனிதே நிறைவுற்றது.





# மாதாந்திர நடமாடும் பொது மருத்துவ முகாம்கள்

**காஞ்சிபுரம் தெற்கு**

**236 பயனாளிகள்** **76 சேவாதளத்தொண்டர்கள்**

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் தாம்பரம் சமிதியின் தத்து கிராமமான ஆரம்பாக்கத்தில் 17.05.2026 அன்று இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 114 பயனாளிகள் கலந்துகொண்டனர்.

இதில் 63 பேருக்கு ஆய்வகப் பரிசோதனைகளும், தகுதியானவர்களுக்கு இ.சி.ஜி. மற்றும் எக்ஸ்ரே பரிசோதனைகளும் செய்யப்பட்டன. கண் பரிசோதனை செய்துகொண்ட 20 பேரில், கண்புரை பாதிப்பு கண்டறியப்பட்ட 3 நபர்கள் மேல்சிகிச்சைக்காகப் பம்மல் சங்கரா கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பணியில் 43 சேவாதளத்தொண்டர்கள் ஈடுபட்டனர்.

மண்ணிவாக்கம் இலவச மருத்துவ முகாம் மண்ணிவாக்கம் சமிதி வளாகத்தில் 24.05.2026 அன்று இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 122 பயனாளிகள் கலந்துகொண்டனர். இதில் 112 பேருக்கு ஆய்வகப் பரிசோதனைகளும், 34 பேருக்குக் கண் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனை முடிவில் 2 பேர் கண்புரை கண்புரை அறுவைசிகிச்சைக்காக பம்மல் சங்கர கண் மருத்துவமனைக்கு அனுப்பிவைலப்பட்டனர். 39 பேருக்கு இலவசக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும் 7 பேருக்கு யோகா பயிற்சியும், தகுதியான 50 பேருக்குச் சாயி புரதச்சத்து மாவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. இப்பணியில் 43 சேவாதளத்தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர். இரு முகாம்களிலும் கலந்துகொண்ட பயனாளிகள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் காலைச் சிற்றுண்டியும் மதிய உணவும் நாராயண சேவையாக வழங்கப்பட்டன. மொத்தம் 76 சேவாதளத்தொண்டர்கள் ஒன்றிணைந்து ஆற்றிய இப்பணியின் மூலம் 236 பயனாளிகள் நலம் பெற்றனர்.





# ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டங்கள்

**காஞ்சிபுரம் தெற்கு**

**06.05.2026** **205 சேவாதளத்தொண்டர்கள்**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பேரருளால், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் அன்னை ஈஸ்வரம்மா தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடின.

அதிகாலையில் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகர சங்கீர்த்தனம் ஆகியவற்றுடன் விழாத் தொடங்கியது. நண்பகலில் நாராயண சேவையும், பொதுமக்களின் தாகத்தைத் தணிக்க நீர்மோர் விநியோகமும் நடைபெற்றன.

மாலையில் சிறப்புப் பஜனை நிகழ்வுகளும், பாலவிகாஸ் மாணவச் செல்வங்களின் பக்தித் திறமைகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மேலும், விழாவின் முக்கிய நிகழ்வாகப் பெற்றோர்களுக்குக் குழந்தைகள் செய்த பாத பூஜை பக்தி உணர்வுடன் அரங்கேறியது.





# முதியோர் இல்ல சேவை

காஞ்சிபுரம் தெற்கு

60 பயனாளிகள் | 18 சேவாதளத்தொண்டர்கள்

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக 03.05.2026 அன்று ஸ்ரீ சங்கரா முதியோர் இல்லத்தில் சிறப்புப் பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்கு நடைபெற்ற பஜனையில் முதியோர்கள் அனைவரும் பக்திப் பரவசத்துடன் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து, இல்லத்தில் உள்ள முதியவர்கள் அனைவருக்கும் வஸ்திர தானம் (ஆடைகள்) வழங்கப்பட்டன. பகவானின் பேரருளால் இந்நிகழ்வு பக்தி உணர்வுடன் சிறப்பாக நிறைவுற்றது.





# சிறப்பு மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

60 பயனாளிகள் | 10 சேவாதளத்தொண்டர்கள்

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக 17.05.2026 அன்று ஸ்ரீ சங்கரா முதியோர் இல்லத்தில் சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் இல்லத்தில் உள்ள முதியவர்கள் மற்றும் பணியாளர்கள் என மொத்தம் 60 பயனாளிகள் கலந்துகொண்டு மருத்துவப் பரிசோதனைகளைச் செய்துகொண்டு நலம் பெற்றனர். பகவானின் பேரருளால் இந்தச் சேவை முகாம் சிறப்பாக நிறைவுற்றது.



# காஞ்சிபுரம் மணிமண்டப உழவாரப்பணி

**காஞ்சிபுரம் வடக்கு**

**17.05.2026** **84 சேவாதளத்தொண்டர்கள்**

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில் மே மாதம் 17-ஆம் நாளன்று, காஞ்சிபுரம் மகாபெரியவா மணிமண்டபத்தில் உழவாரப்பணி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்தூய்மைப் பணியில் 84 சேவாதளத்தொண்டர்கள் (49 ஆண்கள் மற்றும் 35 மகளிர்) தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டனர்.

மணிமண்டப வளாகத்தில் உள்ள நந்தி சந்நிதி, கோபுரம், இரண்டு கோசாலைகள், சமையலறை மற்றும் கருவறை ஆகிய பகுதிகள் பக்தி உணர்வுடன் தூய்மை செய்யப்பட்டன.

சேவாதளத்தொண்டர்களின் இந்த உன்னதமான சேவை, மணிமண்டபத் திருக்கோவில் நிர்வாகத்தினரால் பெரிதும் பாராட்டப்பட்டது.



# மாவட்ட ஆன்மீகப் பிரிவின் சார்பில் சமிதிகளைப் பார்வையிடல்

**காஞ்சிபுரம் வடக்கு**

**03,10.05.2026** **30 சேவாதளத்தொண்டர்கள்**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தெய்வீக அருளாசியுடன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ஆன்மிகப் பிரிவு சார்பில் மகாலட்சுமி நகர் மற்றும் பம்மல் சமிதிகள் பார்வையிடப்பட்டன. அடிமட்ட அளவில் ஆன்மிகச் செயல்பாடுகளை வலுப்படுத்துவது, புதியவர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பது மற்றும் பக்தர்களிடையே ஆழமான ஒற்றுமையை வளர்ப்பது ஆகியவை இப்பயணங்களின் முதன்மை நோக்கங்களாகும்.

மாநில ஆன்மிக ஒருங்கிணைப்பாளர் மதிப்பிற்குரிய திரு. கணபதி சாய்ராம் அவர்கள் கலந்துகொண்டு சமிதிகள் அனைத்தும் எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் ஆன்மிக மையங்களாகத் திகழ வேண்டும் என்று ஊக்கமளிக்கும் உரையாற்றினார். மேலும் தியானம், வாசகர் வட்டம் மற்றும் கூட்டு ஆன்மிகச் சாதனைகள் மூலம் தனிமனித மாற்றத்தையும், சாய் குடும்பத்தின் ஒற்றுமையையும் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

இப்பயணங்களில் மாவட்ட ஆன்மிக மற்றும் பஜனை ஒருங்கிணைப்பாளர்கள், சமிதிப் பொறுப்பாளர்கள், பஜனைப் பாடகர்கள், வாத்தியக் கலைஞர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தங்களின் ஆன்மிக அனுபவங்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர். சமிதித் தொண்டர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பு முயற்சிகள் பாராட்டப்பட்டு, இறுதியாகப் பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி சமர்ப்பிக்கப்பட்டுப் பிரசாதம் விநியோகிக்கப்பட்டLayoutடன் இந்நிகழ்வு ஆன்மிக எழுச்சியுடன் நிறைவுற்றது.



# ஈஸ்வரம்மா தின விழா

**காஞ்சிபுரம் வடக்கு**

**06.05.2026** **53 சேவாதளத்தொண்டர்கள்**

ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புகள், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் சார்பில் வி.ஜி.பி. ராஜகீழ்ப்பாக்கம் சமிதியில் அன்னை ஈஸ்வரம்மா தினம் பக்திப்பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. மாலை 6:30 மணிக்குத் தொடங்கிய இந்நிகழ்ச்சியில், பாலவிகாஸ் மாணவர்களின் பெற்றோர்களுக்கான பாத பூஜை, வேத பாராயணம் மற்றும் பஜனைகள் நடைபெற்றன. அன்னை ஈஸ்வரம்மாவின் தியாகம், அன்பு, பக்தி மற்றும் மனிதநேயப் பணிகள் குறித்துச் சிறப்புரைகள் வழங்கப்பட்டன.

மேலும், பாலவிகாஸ் மாணவர்கள் “பர்த்தி பெற்ற அன்பின் சிகரம் ஈஸ்வரம்மா” என்ற தலைப்பில் வழங்கிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சி பக்தர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. நிறைவாக மங்கள ஆரத்தி காட்டப்பட்டு பிரசாதம் வழங்கப்பட்டது.

பொழிச்சலூர் சமிதியில் 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. காலை 8:00 மணி முதல் 9:00 மணி வரை விநாயகர் மற்றும் சீரடி பாபாவிற்கு அபிஷேகம் நடைபெற்றது.

மாலை வேளையில் நடைபெற்ற மாத்ரு பூஜையில் பாலவிகாஸ் குழந்தைகள் தங்களது பெற்றோர்களுக்குப் பாத பூஜை செய்து ஆசி பெற்றனர். தொடர்ந்து நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் பக்தி நடனம், பாடல்கள், பேச்சுப்போட்டிகள் மற்றும் சுவாமியின் அற்புதங்கள் குறித்த விவரிப்புகள் இடம் பெற்றன.

இதனைத் தொடர்ந்து, ஒரு தம்பதியினர் சுவாமிக்குச் சிறப்பு அர்ச்சனை செய்தனர். பின்னர் அனைத்து விதமான இசைக்கருவிகளுடன் பஜனை வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியின் நிறைவாகப் பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டு, விபூதி பிரசாதம் மற்றும் நாராயண சேவை பிரசாதம் அனைவருக்கும் பக்திப்பூர்வமாக வழங்கப்பட்டது.





# பாலவிகாஸ் கோடை கால வகுப்புகள்

**காஞ்சிபுரம் வடக்கு**

**14-17.05.2026** **45 சேவாதளத்தொண்டர்கள்**

நெமிலிச்சேரி சமிதி சார்பில் 14.05.2026 முதல் 17.05.2026 வரை நான்கு நாட்கள் “மலரட்டும் நற்பண்புகள்” (Blossom with Values) என்ற தலைப்பில் நடைபெற்ற கோடைகால முகாமில் 45 குழந்தைகள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

முகாமின் அனைத்து நாட்களும் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் ஜோதி தியானத்துடன் தொடங்கின.

முதல் நாளில் குழந்தைகளுக்குத் திருக்குறளின் அறவுரைகளும் வாழ்வியல் நெறிகளும் எளிமையாக எடுத்துரைக்கப்பட்டன. இரண்டாம் நாளில் விளையாட்டுப் போட்டிகள் மூலம் குழு ஒற்றுமையும், மாலை அமர்வில் கைவினைக் கலைப் பயிற்சியும் வழங்கப்பட்டன.

மூன்றாம் நாளில் எண்ணம், சொல், செயல் மற்றும் குணநலம் குறித்த செயல்முறைப் பயிற்சிகளும், மன ஒருமைப்பாட்டை வளர்க்கும் பல்வேறு செயல்பாடுகளும் நடத்தப்பட்டன. நான்காம் நாளில் நகர் சங்கீர்த்தனம், யோகா மற்றும் அடுப்பில்லாச் சமையல் (Fireless Cooking) செயல்பாடுகள் நடைபெற்றன.

மேலும், ஆசைகளைக் கட்டுப்படுத்துதல் (Ceiling on Desires) விழிப்புணர்வும், இலவசப் பல் பரிசோதனை முகாமும் நடத்தப்பட்டன. முகாமில் மனிதநேய மதிப்புகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட ஐந்து அணிகளில் சாந்தி அணி முதலிடம் பெற்றது.

பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டு முகாம் சிறப்பாக நிறைவுற்றது.

மீனம்பாக்கம் சமிதி சார்பில் குழந்தைகளுக்கான “மதிப்புரிமை சார்ந்த கோடை பயிற்சி முகாம்” மே 1, 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் ஆனந்தமிகு சூழலில் சிறப்பாக நடத்தப்பட்டது.

இம்முகாமில் ஆசைகளைக் கட்டுப்படுத்துதல் (Ceiling on Desires) குறித்த உரையாடல் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து வினாடி வினா, யோகா, அடுப்பின்றிச் சமைத்தல், பல்வேறு விளையாட்டுகள் ஆகிய செயல்பாடுகள் நடைபெற்றன. வேத பாராயணம் மற்றும் பஜனை நடைபெற்றது.

இறுதி நாளில் நடைபெற்ற பக்திபூர்வமான மாத்ரு பூஜையுடன் இந்த முகாம் இனிதே நிறைவடைந்தது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள் அனைவரும் மிகச் சிறப்பாகக் கலந்துகொண்டு பயனடைந்தனர்.





# ஸ்ரீ சத்ய நாராயண பூஜை

காஞ்சிபுரம் வடக்கு

01.05.2026 15 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பேரருளால், பொழிச்சலூர் சமிதியில் ஸ்ரீ சத்ய நாராயண பூஜை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இப்பூஜையில் பெரியோர்கள், சமிதிப் பொறுப்பாளர்கள் மற்றும் சாயி அன்பர்கள் அனைவரும் பக்தி உணர்வுடன் கலந்துகொண்டு பகவானின் பரிபூரண அருளையும் ஆசிகளையும் பெற்றனர். நிறைவாக அனைவருக்கும் சுவாமியின் பிரசாதம் வழங்கப்பட்டது.





# நீர் மோர் வழங்கும் சேவை

காஞ்சிபுரம் வடக்கு

14.04.2026-31.05.2026

255 சேவாதளத்தொண்டர்கள்

சிட்லபாக்கம் சமிதி அன்பர்கள், கோடைகால வெப்பத்தைக் கருத்தில்கொண்டு மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை நீர்மோர் வழங்கும் சேவையை மிகச் சிறப்பாக நடத்தினர். இச்சேவை பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமைகளில், வார அட்டவணையின்படி பாலவிகாஸ் குழந்தைகளின் பெற்றோர்கள் முன்னிலையில் பேரானந்தத்துடன் நடைபெற்றது.

சமிதி அருகில் உள்ள பொதுமக்கள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் என அனைவருக்கும் நீர்மோர் வழங்கப்பட்டது. மேலும், சமிதிப் பகுதியில் உள்ள கட்டிட வேலை செய்யும் தொழிலாளர்கள் இருக்கும் இடத்திற்கே நேரடியாகச் சென்று பாலவிகாஸ் குழந்தைகள் நீர்மோர் வழங்கித் தங்களின் அன்பைப் பகிர்ந்து கொண்டனர்.

மாடம்பாக்கம் சமிதியின் வெள்ளி விழா நீர்மோர் சேவை பகவான் பாபாவின் “மக்கள் சேவையே மகேசன் சேவை” எனும் வாக்கிற்கிணங்க, மாடம்பாக்கம் சமிதியில் கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கோடைகால நீர்மோர் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டும் ஏப்ரல் 14 முதல் மே 31 வரை தினசரி காலை 10 மணி முதல் 11 மணி வரை என 48 நாட்களுக்குச் சிவன் கோவில் பேருந்து நிறுத்தத்தில் நாளொன்றுக்கு 200 பேருக்கு நீர்மோர் வழங்கப்பட்டது. இச்சேவையில் ஆண்கள், மகளிர் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் என, தினமும் 12 முதல் 15 சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்றனர்.

மாடம்பாக்கம் கிருஷ்ணர் கோவில் அருகே ஏப்ரல் 14 முதல் மே 15 வரை 30 நாட்களுக்குத் தினசரி 125 பேருக்கு நீர்மோர் விநியோகம் செய்யப்பட்டது. இச்சேவையில் மகளிர் உட்படத் தினமும் 8 சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்றனர்.

மேலும், வெங்கடமங்கலம் கிராமத்தில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வார இறுதி நாட்களில் மொத்தம் 9 நாட்களுக்கு நாளொன்றுக்கு 200 பேருக்கு நீர்மோர் வழங்கப்பட்டது. இச்சேவையில் 5 சேவாதள இளைஞர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். மே 31 அன்று பகவானுக்கு மகா மங்கள ஆரத்தி காண்பிக்கப்பட்டு, பிரசாத விநியோகத்துடன் இவ்வாண்டிற்கான நீர்மோர் சேவை இனிதே நிறைவுற்றது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் சமிதி சார்பில் கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கில், ஏப்ரல் மற்றும் மே 2026 மாதங்களில் வாரந்தோறும் நீர்மோர் விநியோகச் சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச்சேவையில் சாய் இளைஞர்கள், பாலவிகாஸ் குழந்தைகள், அவர்களது பெற்றோர்கள் மற்றும் சமிதி அன்பர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றுப் பொதுமக்களுக்குச் சேவை செய்தனர்.

இக்கோடைகாலத்தில் ஆறு கட்டங்களாக நடைபெற்ற நீர்மோர் விநியோகத்தின் மூலம் மொத்தம் சுமார் 1,650 லிட்டர் நீர்மோர் வழங்கப்பட்டு, 5,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தனர்.

கடுமையான கோடை வெயிலில் பொதுமக்களின் தாகத்தைத் தணிக்கும் வகையில் நடைபெற்ற இந்த மனிதநேயச் சேவை, அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இது மட்டுமன்றி, இச்சேவையின் ஒரு பகுதியாகச் சுமார் 350-க்கும் மேற்பட்டோருக்குக் காய்கறி சாதமும், 35 பேருக்குத் தக்காளிச் சாதப் பொட்டலங்களும் நாராயண சேவையாக அன்போடு பரிமாறப்பட்டன.

‘சேவையே சாதனை’ என்ற உயரிய எண்ணத்துடன் நடைபெற்ற இப்புனிதச் சேவையைச் செய்யும் வாய்ப்பை அருளிய பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவிற்குச் சேவாதளத்தினர் தங்களது பணிவான நமஸ்காரங்களைச் சமர்ப்பித்தனர்.





# முதியோர் இல்லத்தில் பஜனை

காஞ்சிபுரம் வடக்கு

05.05.2026 15 சேவாதளத்தொண்டர்கள்

நன்மங்கலம் முதியோர் இல்லத்தில் 05.05.2026 செவ்வாய்க்கிழமை அன்று விநாயகர் மற்றும் ஆஞ்சநேயருக்குச் சிறப்பு அபிஷேகம் பக்திப்பூர்வமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மூவரசம்பேட்டை சமிதி உறுப்பினர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்துகொண்டு பக்திப் பஜனைப் பாடல்களைப் பாடினர். தொடர்ந்து, அங்குள்ள பெரியவர்களிடம் அன்போடு நலம் விசாரித்து, அவர்களின் பாதங்களைத் தொட்டு ஆசி பெற்றனர். பகவானின் அருளால் இந்நிகழ்வு முதியோர்களுக்கு மகிழ்ச்சியையும் ஆன்மிக அமைதியையும் அளிப்பதாக அமைந்தது.





# மாடம்பாக்கம் தேனுபுரீஸ்வரர் கோவில் உற்சவ சேவை

காஞ்சிபுரம் வடக்கு | 27,30.05.2026
2000 பயனாளிகள் | 50 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அளப்பரிய அருளாசியுடன், மாடம்பாக்கம் சமிதியைச் சேர்ந்த சேவாதளத்தொண்டர்களுக்கு, மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோவிலில் வெகு விமரிசையாக நடைபெற்ற தேரோட்டம் மற்றும் திருக்கல்யாண உற்சவத்தின் போது சிறப்பான சேவைகளைச் செய்யும் புனிதமான நல்வாய்ப்பு கிட்டியது.

கடந்த 27-ஆம் தேதி அன்று நடைபெற்ற தேரோட்டத்தின் போது, சமிதி வளாக வாயிலில் சமிதியின் சார்பில் சுமார் 700 பொதுமக்களுக்கு நீர்மோர் விநியோகம் செய்யப்பட்டது. இக்கோடைகால தாகம் தீர்க்கும் சேவையில் ஆண்கள், மகளிர் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் என மொத்தம் 26 சேவாதளத் தொண்டர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

தொடர்ந்து 30-ஆம் தேதி அன்று நடைபெற்ற தேனுபுரீஸ்வரர்-தேனுகாம்பாள் திருக்கல்யாணத்தை முன்னிட்டு, கோவிலுக்கு வருகை தந்த 1,200-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்குச் சுவையான முழு தென்னிந்திய மதிய உணவு பிரசாதமாகப்

பரிமாறப்பட்டது. நள்ளிரவு வரை நீடித்த இந்த நாராயண சேவையை, மூத்த மற்றும் இளைய சேவாதளத் தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிகுந்த அன்புடனும் புத்துணர்வுடனும் நேர்த்தியாகச் செய்து முடித்தனர்.

இச்சேவை நிகழ்வின் போது சேவாதளத் தொண்டர்கள் அனைவரும் தூய்மையான வெள்ளை நிற உடையும், புனிதமான கழுத்துப்பட்டையும் அணிந்து அமைதியான ஆன்மிகச் சூழலைப் பராமரித்தனர். ஆரம்பக்கட்ட மேசை, நாற்காலி ஏற்பாடுகள் முதல் உணவு பரிமாறி முடிக்கும் வரை அவர்கள் இன்முகத்துடன் ஆற்றிய குறைபாடற்ற சேவை பொதுமக்கள் மற்றும் கோவில் நிர்வாகத்தினரால் பெரிதும் பாராட்டப்பட்டது. தொண்டர்கள் இப்பாராட்டுகள் அனைத்தையும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பாத மலர்களில் சமர்ப்பித்துத் தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.





# அம்மை-அப்பர் கல்யாண உற்சவம்

காஞ்சிபுரம் வடக்கு | 24.05.2026 | 250 பயனாளிகள் | 11 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பேரருளால், நெமிலிச்சேரி சமிதியில் 24.05.2026 அன்று காலை 7:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை அம்மை-அப்பர் கல்யாண உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்காகத் திருவண்ணாமலையிலிருந்து சிறப்பு மூர்த்தி கொண்டு வரப்பட்டு, விசேஷ பூஜைகள், அர்ச்சனைகள் மற்றும் வழிபாடுகள் பக்திப்பூர்வமாக நடத்தப்பட்டன. விழா முழுவதும் தெய்வீக ஆனந்தமும் பக்தி உணர்வும் நிறைந்திருந்தது.

நெமிலிச்சேரி சமிதியைச் சேர்ந்த 7 ஆண்கள், 2 மகிளாக்கள், ஒரு பாலவிகாஸ் சிறுவன் மற்றும் ஒரு பாலவிகாஸ் சிறுமி என மொத்தம் 11 சேவாதள உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஒற்றுமை, அன்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்களின் சேவையினை வழங்கினர்.

இவர்களின் நெறிப்படுத்தப்பட்ட ஆன்மிகச் சேவையின் மூலம் விழாவிற்கு வருகை தந்த சுமார் 250 பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றித் தரிசனம் செய்து, ஆன்மிக மகிழ்ச்சியையும் இறையருளையும் பெற்றனர். இந்நிகழ்ச்சியின் வெற்றிக்காகத் தங்கள் நேரம்,

உழைப்பு மற்றும் பக்தியை அர்ப்பணித்த அனைத்து சாய் குடும்பத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள் சமர்ப்பிக்கப்பட்டன.





# கோடைகாலச் சிறப்புப் பயிற்சி முகாம்

தருமபுரி/கிருஷ்ணகிரி

29.05.2026 122 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பிரியா வித்யா ஷங்கர் மற்றும் அவரது குழுவினரால் ஓசூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில், “Indian Culture and Human Values” (இந்தியப் பண்பாடும் மனிதநேய மதிப்புகளும்) என்ற தலைப்பில் பாலவிகாஸ் மற்றும் பிற குழந்தைகளுக்கான கோடைகாலச் சிறப்புப் பயிற்சி முகாம் 2026 மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. மூன்று நாட்கள் நடைபெற்ற இப் பயிற்சி முகாமில் கலந்துகொள்ள 122 மாணவ, மாணவிகள் பதிவு செய்திருந்தனர். இவர்களில் 90 மாணவர்கள் மூன்று நாட்களும் தொடர்ச்சியாகக் கலந்துகொண்டு முழுமையாகப் பயனடைந்தனர்.

இம்முகாமில் பயிற்சிகளை வழங்கிய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கருத்தாளர்கள் பலர், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் கல்வி நிறுவனங்களில் பயின்று பட்டம் பெற்ற முன்னாள் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முகாமில் சமூகத்திற்குத் திரும்பக் கொடுத்தல் (A Noble Return), நம்மைச் சுற்றியுள்ள மனிதநேய மதிப்புகள், மதிப்புகள் சார்ந்த விளையாட்டுகள், நேர மேலாண்மை, நேர்மறைச்

சிந்தனையின் வலிமை, இசையும் ராகங்களின் மருத்துவக் குணங்களும், சாலைப் பாதுகாப்பு மற்றும் எண்ணம்-மூச்சு மேலாண்மை (Thought & Breath Management) போன்ற பல்வேறு பயனுள்ள தலைப்புகளில் குழந்தைகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இப்பயிற்சிகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு வினாடி-வினா போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும், முகாமில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும், முகாமில் கலந்துகொண்ட குழந்தைகள் அனைவருக்கும் தினசரி மதிய உணவு பகவானின் பிரசாதமாக அன்போடு பரிமாறப்பட்டது. இக்கோடை முகாமிற்கான அனைத்து சிறப்பான ஏற்பாடுகளையும் ஓசூர் சமிதியின் பொறுப்பாளர்கள், இளைஞர் அணியினர் மற்றும் குருமார்கள் அனைவரும் ஒன்றிணைந்து கூட்டு முயற்சியாகச் செய்திருந்தனர்.

# பிரேம பிரவாஹினி - 2026

**தருமபுரி/கிருஷ்ணகிரி**

**31.05.2026** **120 பயனாளிகள்**

கிருஷ்ணகிரி மெயின் சமிதி மற்றும் ஓசூர் போர்டு சமிதி ஆகியவற்றின் கூட்டு முயற்சி சார்பில் 'பிரேம பிரவாஹினி' என்னும் தெய்வீகக் கலை நிகழ்ச்சி பக்தி உணர்வுடன் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சாய் அன்பர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என மொத்தம் 120 பேர் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

விழாவில் பாலவிகாஸ் மாணவச் செல்வங்களின் பக்தித் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாகச் சாய் வந்தனம் நடனம், பக்திப் பரவசமூட்டும் கோலாட்டத்துடன் கூடிய ராம பஜனை, கணேச வந்தனம் எனப்படும் விநாயகர் நடனம் மற்றும் பாரம்பரியக் காவடியாட்டம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின.

பகவானின் பேரருளால் இந்த ஆன்மிகக் கலை விழா காண்போர் மனதைக் கவரும் வகையில் அமைந்திருந்தது.


78688 58271
81248 58271

# பிரசாந்தி நிலையத்தில் பாலவிகாஸ் மாணவர் சேவை

தருமபுரி/கிருஷ்ணகிரி

மே 2026

17 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தெய்வீக அருளாசியுடன், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட பாலவிகாஸ் பிரிவைச் சேர்ந்த 10 சிறுவர்கள் மற்றும் 7 சிறுமிகள் என மொத்தம் 17 மாணவர்கள் மே மாத பிரசாந்தி சேவையில் பங்கேற்கும் அரிய பாக்கியத்தைப் பெற்றனர்.

பிரசாந்தி நிலையத்தின் புனிதமான ஆன்மிகச் சூழலில் நடைபெற்ற இச்சேவையின் மூலம், மாணவர்கள் சேவை, ஒழுக்கம், தன்னலமின்மை, பணிவு மற்றும் பக்தி ஆகிய உயரிய மனித விழுமியங்களை ஆழமாக உணர்ந்து கொண்டனர். சேவையின் ஒவ்வொரு தருணத்தையும் இறை வழிபாடாகக் கருதி, அர்ப்பணிப்பு உணர்வுடனும் மகிழ்ச்சியுடனும் தங்களது பொறுப்புகளை அவர்கள் நிறைவேற்றினர்.

இவ்வாய்ப்பு மாணவர்களுக்குப் பகவானின் “மனித சேவையே மாதவ சேவை” என்ற தெய்வீகப் போதனையை நடைமுறையில் அனுபவிக்கும் ஒரு உன்னதமான சந்தர்ப்பமாக அமைந்தது. மேலும், பிரசாந்தி நிலையத்தின்

ஆன்மிக அதிர்வுகளையும், உலகெங்கிலும் இருந்து வந்த பக்தர்களின் அன்பையும் நேரில் அனுபவித்த மாணவர்கள் தங்களது வாழ்க்கையில் நல்லொழுக்கம், இறைநம்பிக்கை மற்றும் சேவை மனப்பான்மையை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் பேருக்கத்தைப் பெற்றனர்.

இவ்வாறாக, இந்த மே மாத பிரசாந்தி நிலையச் சேவை மாணவர்களின் ஆன்மிக வளர்ச்சிக்கும், நற்பண்பு மேம்பாட்டிற்கும், மனிதநேய மதிப்புகளை வாழ்வில் என்றும் கடைப்பிடிப்பதற்கும் ஒரு மறக்கமுடியாத வழிகாட்டியாக அமைந்தது.

# சாய் ஸ்ருதி கொடைக்கானல் ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டம்

**கோயம்புத்தூர்** **132 பயனாளிகள்**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பெருங்கருணையால், கோயம்புத்தூர் மாவட்டத்தின் பல்வேறு சமிதிகளைச் சேர்ந்த பாலவிகாஸ் மாணவர்கள், குருமார்கள், பெற்றோர்கள், சமிதி உறுப்பினர்கள் மற்றும் பக்தர்கள் எனச் சுமார் 132 நபர்கள், கடந்த 02.05.2026 முதல் 07.05.2026 வரை சாய் ஸ்ருதி, கொடைக்கானலில் நடைபெற்ற அன்னை ஈஸ்வரம்மா தினச் சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் ஆன்மிகப் பாக்கியத்தைப் பெற்றனர்.

இப்புனிதப் பயணத்தின் போது ஓம்காரம், சாய் சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம் மற்றும் வேத பாராயணம் ஆகியவை தினசரி பக்தி உணர்வுடன் நடத்தப்பட்டன. மேலும், பகவானின் தெய்வீகச் சந்நிதியில் சாய் பஜனை, ‘வம்சி குஞ்சம்’ என்னும் நாடகம், விழுமியங்கள் சார்ந்த சிறு விளையாட்டுகள், ‘இளம் சாய்’ குழுவினரின் வில்லுப்பாட்டு மற்றும் ஹனுமான் சாலிசா பாராயணம் போன்ற பல்வேறு உன்னதமான கலை நிகழ்ச்சிகளை பாலவிகாஸ் குழந்தைகள் சுவாமிக்கு அன்போடு சமர்ப்பித்தனர்.

பகவானின் தெய்வீக அதிர்வுகளால் நிறைந்த சாய் ஸ்ருதியில் நடைபெற்ற இந்நிகழ்வுகள், குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் மற்றும் பக்தர்களுக்கும் எல்லையற்ற ஆன்மிக ஆனந்தத்தை அளிப்பதாக அமைந்தன. முகாமின் நிறைவாக, சமிதி அன்பர்களால் பங்கேற்ற பாலவிகாஸ் மாணவர்கள் அனைவருக்கும் பள்ளிக்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் கோப்புகள் (Files) அன்பளிப்பாக வழங்கப்பட்டன.





# பகவானின் கோயம்புத்தூர் விஜய நினைவு நாள் கொண்டாட்டம்

## கோயம்புத்தூர்

நம் அன்பிற்குரிய பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள் 08.05.1989 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தின் மூன்று முக்கிய இடங்களுக்கு விஜயம் செய்து பக்தர்களுக்குத் தரிசனம் தந்து அருளாசி வழங்கினார். அந்தப் புனிதமான நாளில் போத்தனூர் சமிதி மற்றும் அன்னபூரணிப்பேட்டை சமிதிகளுக்கு சுவாமி நேரில் வருகை தந்து பக்தர்களை வாழ்த்தியதோடு, குப்பநாயக்கன்பாளையத்தில் அருள்மிகு ஸ்ரீ சத்திய காளியம்மன் விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து தெய்வீக அருள் வழங்கினார்.

ஸ்வாமியின் பெருங்கருணையினால், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளின் நினைவாக இந்த வருடம் 08.05.2026 அன்று மேற்குறிப்பிட்ட மூன்று இடங்களிலும் பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. சாய் பக்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களின் ஆழமான பக்தியைப் பகவானின் பாத மலர்களில் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர்.

இதன் ஒரு பகுதியாகப் போத்தனூர் சமிதியில் சிறப்பு ஹோமம், தெய்வீக இசை நிகழ்ச்சி மற்றும்

கூட்டுப் பஜனைகள் நடைபெற்றன. குப்பநாயக்கன்பாளையம் அருள்மிகு ஸ்ரீ சத்திய காளியம்மன் ஆலயத்தில் அம்மனுக்கு விசேஷ அபிஷேகங்கள், அலங்காரங்கள், பஜனை மற்றும் மகா தீபாராதனைகள் பக்திப்பூர்வமாக நடத்தப்பட்டன. அதேபோன்று, மேட்டுப்பாளையம் அன்னபூரணிப்பேட்டை சமிதியிலும் சிறப்பு ஆன்மிக நிகழ்ச்சியாகப் பஜனைகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் அனைத்திலும் சாய் பக்தர்களும் பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு பகவான் பாபாவின் அளப்பரிய அருளாசிக்குப் பாத்திரமானார்கள்.





# மகிளா இளைஞரணி மாநாடு 2026

கோயம்புத்தூர் | 70 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பெருங்கருணையால், கோயம்புத்தூர் மாவட்ட “மகிளா இளைஞரணி மாநாடு 2026” கடந்த 10.05.2026 அன்று ரேஸ் கோர்ஸில் உள்ள ஸ்ரீ சத்ய சாயி மந்திரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்மாநாட்டில் மாவட்டம் மற்றும் சமிதி அளவிலான மகிளா இளைஞர்கள், பொறுப்பாளர்கள் என மொத்தம் 70 பேர் பக்தி உணர்வுடன் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சி பிரசாந்தி கொடி ஏற்றுதல், மங்கள குத்துவிளக்கு ஏற்றுதல், வேதபாராயணம் மற்றும் பஜனைகளுடன் பக்திப்பூர்வமாகத் தொடங்கியது. மாவட்ட மகிளா யூத் ஒருங்கிணைப்பாளரின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கோவை மாவட்டத் தலைவர் திரு. டி. எஸ். வெங்கடேச நாராயணன் அவர்கள் அறிமுக உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, ஸ்ரீ சத்ய சாய் உயர்கல்வி நிறுவனத்தின் அனந்தபூர் வளாக வார்டன் டாக்டர் மீரா, வேலூர் மாவட்டத் தலைவர் திரு. விமலநாதன் மற்றும் அனந்தபூர் வளாக முன்னாள் மாணவி செல்வி கீர்த்தனா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அவர்கள் முறையே, “இன்றைய இளைஞர்களுக்கான ஸ்வாமியின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து பெறும்

வாழ்க்கைப் பாடங்கள்", "தன்னலமற்ற சேவை ஒரு ஆன்மீக சாதனை" மற்றும் "யூத்திலிருந்து சாய் யூத் வரை - ஒரு மாற்றம் மிக்க பயணம்" ஆகிய உன்னதமான தலைப்புகளில் எழுச்சியூட்டும் உரைகளை வழங்கினர். மேலும், சாய் பஜனைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சுவாரஸ்யமான விளையாட்டு அமர்வும் இளைஞர்களால் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு (தெற்கு) மாநில மகிளா யூத் ஒருங்கிணைப்பாளர் திருமதி சாய் தேவி ரூபேஷ் அவர்களின் நிறைவுரைக்குப்பின், பங்கேற்பாளர்கள் அனைவரும் சாய் பாதையில் பயணிப்பதற்கான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். இறுதியாகப் பகவானின் தெய்வீக உரை ஒலிபரப்பப்பட்டு, மகா மங்கள ஆரத்தியுடன் மாநாடு இனிதே நிறைவுற்றது. இம்மாநாட்டில் 18 வயதுக்குட்பட்ட பாலவிகாஸ் 4-ஆம் பிரிவு மாணவர்கள் 9 பேரும், 5 NLP மாணவர்கள் உட்பட 18 முதல் 40 வயதுக்குட்பட்ட மகிளா யூத் உறுப்பினர்கள் 30 பேரும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.





# ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு மையம் தொடக்க விழா

**கோயம்புத்தூர்** **60 பயனாளிகள்**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பேரருளால், கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டினத்தில் உள்ள ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் "ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு மையம்" தொடக்க விழா 18.05.2026 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இப்பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், இந்த மையத்தில் இலவச தையல் பயிற்சி, கணினி பயிற்சி மற்றும் வெல்டிங் பயிற்சிகள் அளிப்பதற்கான விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடக்க விழா நாளன்று காலை 05:30 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் பக்திப்பூர்வமாகத் தொடங்கின. தொடர்ந்து காலை 07:00 மணிக்குச் சிறப்புச் சாய் பஜனை நடைபெற்று, வருகை தந்த அன்பர்கள் அனைவருக்கும் சுவையான சிற்றுண்டி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, காலை 09:30 மணிக்குக் கோவை மாவட்டத் தலைவர் அவர்கள் பங்கேற்று, ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு மையத்தின் ஈஸ்வரம்மா பயிற்சிக்கூடத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

மேலும், திரு. சண்முகசுந்தரம் அவர்கள் ஈஸ்வரம்மா தையல் பயிற்சி மையத்தைத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தொடக்க விழாக் கூட்டத்தில், சமிதியின் மூத்த உறுப்பினர் டாக்டர் வாசுதேவன் அவர்கள் மாணவர்களுக்கான தொடக்க உரையை ஆற்றினார். பின்னர், கோவை மாவட்டத் தலைவர் அவர்கள் மையத்தின் நோக்கம் மற்றும் நற்பண்புகளுடன் கூடிய திறன் மேம்பாட்டின் அவசியம் குறித்துச் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் இப்பகுதியைச் சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டு பயனடைந்தனர். இறுதியாக, மாவட்ட திறன் மேம்பாட்டு மையத்தின் பொறுப்பாளர் வழங்கிய நன்றியுரையுடன் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.





# ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு மையச் சான்றிதழ் வழங்கும் விழா

கோயம்புத்தூர் | 27 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பேரருளால், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி 'சாயி மதுரம்' ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் திறன் மேம்பாட்டு மையத்தில் தையல் பயிற்சி பயின்ற மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் விழா 24.05.2026 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்மையத்தில் தையல் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த 27 மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாவட்டத் தலைவர் மற்றும் மூத்த சாய் பக்தர்களான டாக்டர் திரு. வாசுதேவன், டாக்டர் திருமதி. பத்மா வாசுதேவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். அவர்கள் தையல் பயிற்சி முடித்த மாணவிகளுக்குத் தங்களது கரங்களால் சான்றிதழ்களை வழங்கி, சுயதொழில் புரிந்து வாழ்வில் மேன்மையடைய வாழ்த்துகளையும் அருளாசிகளையும் வழங்கினர். சமிதி பொறுப்பாளர்கள் மற்றும் சாய் அன்பர்களின் கூட்டு முயற்சியால் இவ்விழா இனிதே நிறைவுற்றது.



# ஸ்வாமியின் மாதாந்திர ஆராதனை தினம்

கோயம்புத்தூர் | 300 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பெருங்கருணையால், கடந்த 24 மே 2026 அன்று கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாயி மந்திரில், சுவாமியின் மாதாந்திர ஆராதனை தினம் மிக விமரிசையாகவும் பக்திப்பூர்வமாகவும் அனுசரிக்கப்பட்டது.

அன்று அதிகாலை 05:15 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனத்துடன் ஆராதனை தின நிகழ்ச்சிகள் மங்களகரமாகத் தொடங்கின. அதனைத் தொடர்ந்து, தூய பக்தி உணர்வுடன் வேத பாராயணமும், உலக நன்மைக்காக ஸ்ரீ சத்ய சாயி லக்ஷார்ச்சனையும் பக்திப் பெருக்குடன் நடத்தப்பட்டன.

நாராயண சேவையும் மாலை வழிபாடுகளும் இப்புனித நன்னாளின் ஒரு பகுதியாக, மந்திரில் அன்போடு தயாரிக்கப்பட்ட சுமார் 300 சுவையான உணவுப் பொட்டலங்கள், கிராமப்புற மக்களுக்கும் அனாதை இல்ல வாசிகளுக்கும் நாராயண சேவையாக விநியோகம் செய்யப்பட்டன.

மாலை நிகழ்வுகள் 04:00 மணிக்குத் தொடங்கி, பகவானைப் போற்றும் ஸ்ரீ சத்ய சாயி பஞ்சரத்தின கீர்த்தனைகள் பக்திப்

பரவசத்துடன் பாடப்பட்டன. தொடர்ந்து நடைபெற்ற வேத பாராயணத்தைத் அடுத்து, திருமதி பிரியதர்ஷினி சாய்ராம் மற்றும் குழுவினரின் விசேஷ நாமசங்கீர்த்தன இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக, சாய் பஜனைகள், மகா மங்கள ஆரத்தி மற்றும் சுவாமியின் திவ்ய தரிசனத்துடன் இந்த ஆராதனை தின விழா இனிதே நிறைவுற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# கிராமத்தில் பள்ளி உபகரணங்கள் வழங்கும் சேவை

கோயம்புத்தூர் | 31 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பெருங்கருணையால், கோயம்புத்தூர் மாவட்டம் பீளமேடு சமிதி சார்பில் அதன் தத்து கிராமமாகிய தொட்டிபாளையத்தில், கோடைகால விடுமுறை முடிந்து பள்ளிகள் திறப்பதை முன்னிட்டு கிராமப்புற பாலவிகாஸ் மாணவர்களுக்கான சிறப்புச் சேவை 30.05.2026 அன்று நடைபெற்றது.

“பள்ளிக்குத் திரும்பும் பரிசுத் தொகுப்பு” (Back to School Kit) என்ற திட்டத்தின் கீழ், மாணவர்களின் கல்விக்குத் தேவையான அத்தியாவசிய எழுதுபொருட்கள் அடங்கிய தொகுப்புகள் குழந்தைகளுக்கு அன்போடு வழங்கப்பட்டன. இப்புனிதமான சேவையில் அக்கிராமத்தைச் சேர்ந்த சுமார் 31 பாலவிகாஸ் மாணவர்கள் கலந்துகொண்டு பெரிதும் பயனடைந்தனர்.

பீளமேடு சமிதி உறுப்பினர்களுடன் இணைந்து கோயம்புத்தூர் மாவட்ட மகிளா இளைஞரணி உறுப்பினர்களும் இச்சேவை நிகழ்வில் மிகவும் உற்சாகத்துடன் பங்கேற்று, குழந்தைகளுக்கு எழுதுபொருட்களை வழங்கி தங்களின் அன்பைப் பகிர்ந்துகொண்டனர். குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகச் செய்யப்பட்ட இச்சேவை அப்பகுதி

மக்களிடையே மிகுந்த நெகிழ்ச்சியையும் வரவேற்பையும் பெற்றது.



# சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் சுற்றுச்சூழல் சேவை

**கோயம்புத்தூர்** **95 பயனாளிகள்**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பெருங்கருணையால், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி சமிதி சார்பாகப் பொள்ளாச்சியை அடுத்த டி. நல்லிகவுண்டன்பாளையம் கிராமத்தில் சிறப்பு மருத்துவ ஆலோசனை மற்றும் கண் சிகிச்சை முகாம் 31.05.2026 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமில், அதிநவீன வசதிகள் கொண்ட ஸ்ரீ சத்ய சாயி நடமாடும் மருத்துவமனைப் பேருந்து (Mobile Hospital) தனது 111-ஆவது தடையற்ற கிராமப்புறச் சேவையை வழங்கிச் சிறப்பித்தது. இச்சிறப்பு மருத்துவ முகாமின் மூலம் அக்கிராமத்தைச் சேர்ந்த சுமார் 95 பொதுமக்கள் கலந்துகொண்டு தங்களுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகளையும் கண் சிகிச்சைகளையும் இலவசமாகப் பெற்றுப் பயனடைந்தனர்.

இப்புனிதமான மருத்துவ முகாமுடன் இணைந்து, இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கில் ‘பிரேம தரு’ திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் நற்பணியும் சமிதி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், முகாமிற்கு வருகை தந்த பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் அனைவருக்கும் சாய் அன்பர்களால் சுவையான உணவு நாராயண சேவையாக

அன்போடு பரிமாறப்பட்டது. மருத்துவச் சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசிப்பிணி போக்கும் நாராயண சேவை என மூன்று உன்னதப் பணிகளும் ஒரே நாளில் ஒருங்கிணைக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் பேராதரவோடு இனிதே நிறைவுற்றன.






# ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டங்கள் மற்றும் பயிற்சி முகாம்

சேலம் | 03,06.05.2026 | 15 பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பேரருளால், மே மாதம் மூன்றாம் தேதி அன்று சேலம் டவுன் ஸ்ரீ சத்ய சாயி சேவா மையத்தில் அன்னை ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு பாலவிகாஸ் குழந்தைகள் பங்கேற்ற மாத்ரு பூஜை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் குழந்தைகளின் பெற்றோர்கள் ஆசனங்களில் அமர வைக்கப்பட்டு, அவர்களின் பாதங்களைத் தூய்மையான நீரால் கழுவி, துடைத்து, மஞ்சள், குங்குமம் இட்டு, மலர் தூவிப் பாலவிகாஸ் குழந்தைகள் பக்திப்பூர்வமாக வழிபாடு செய்தனர்.

மாத்ரு பூஜையைத் தொடர்ந்து, சமிதி வாசலில் வைத்து பிரதான சாலையில் சென்ற பொதுமக்கள் அனைவருக்கும் பாலவிகாஸ் குழந்தைகள் தங்களின் கரங்களால் நீர்மோர் விநியோகம் செய்தனர். மங்கள ஆரத்தி மற்றும் பிரசாத விநியோகத்துடன் நிறைவுற்ற இப்புனித நிகழ்வில் 15 பாலவிகாஸ் குழந்தைகள், 20 பெற்றோர்கள், 8 குருமார்கள் மற்றும் சாய் அன்பர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மே மாதம் ஆறாம் தேதி மாலை அன்னை ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டுச் சிறப்புப்

பஜனை நடைபெற்றது. பஜனையின் நிறைவாகச் சேலம் டவுன் சமிதியின் குரூப் 1 மற்றும் குரூப் 2 பாலவிகாஸ் சிறுவர், சிறுமியர் இணைந்து “சேர்ந்து பாடுவோம்” என்ற உன்னதமான பக்திப் பாடல் நிகழ்ச்சியை நடத்தினர். மேலும், பாலவிகாஸ் குழந்தை ஒன்று இரண்டு தெய்வீகப் பாடல்களுக்குப் பரதநாட்டியம் ஆடித் தனது பக்தியைச் சமர்ப்பித்தார். பின்னர் மங்கள ஆரத்தி காண்பிக்கப்பட்டு, அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 7 பாலவிகாஸ் குழந்தைகள், 5 குருமார்கள், பெற்றோர் மற்றும் சாய் அன்பர்கள் எனச் சுமார் 30 பேர் கலந்துகொண்டனர்.

மேலும், பகவானின் அளப்பரிய லீலையினால் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குருமார்களுக்கான ஆன்மிகப் பயிற்சி முகாம் மே மாதம் 19, 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் கொடைக்கானலில் நடைபெற்றது. இக்குரூப் 1 பயிற்சி முகாமில் சேலம் டவுன் சமிதியைச் சேர்ந்த 6 குருமார்கள், சின்ன திருப்பதி சமிதியிலிருந்து ஒரு குரு, சூரமங்கலம் சமிதியிலிருந்து 3 குருமார்கள் மற்றும் மேட்டூர் சமிதியைச் சேர்ந்த 5 குருமார்கள் என மொத்தம் 15 குருமார்கள் கலந்துகொண்டு தங்களுக்குரிய பயிற்சிகளை மிகச் சிறப்பாகப் பெற்றுத் திரும்பினர்.

## நீர் மோர் வழங்கும் சேவை

தஞ்சாவூர் | 01-31.05.2026 | 8000 பயனாளிகள் | 45 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பேரருளால், கும்பகோணம் சமிதியின் சார்பில் ஆண்டுதோறும் கோடைகாலத்தின் கடும் வெப்பத்தைக் கருத்தில் கொண்டு, பொதுமக்களின் தாகத்தைத் தணிக்கும் நோக்கில் "நீர்மோர் வழங்கும் சேவை" பக்தி உணர்வுடனும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையுடனும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுட்டெரிக்கும் கத்தரி வெயிலில் வாடி வரும் பயணிகள், பாதசாரிகள், உழைக்கும் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தினசரி குளிர்ந்த நீர்மோர் சாய் அன்பர்களால் அன்போடு வழங்கப்பட்டு வருகிறது.

இப்புனிதமான சேவையில் கும்பகோணம் சமிதி பாலவிகாஸ் மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டு, பொதுமக்களுக்கு மிகுந்த மரியாதையுடனும் பாசத்துடனும் நீர்மோர் வழங்கித் தங்களின் பக்தித் தொண்டினைச் செய்து வருகின்றனர்.

இந்த நடைமுறைச் சேவையின் மூலம் குழந்தைகள் தன்னலமற்ற பணியின் மகத்துவம், பிறருக்கு உதவும்

நற்பண்பு மற்றும் மனிதநேயத்தின் அவசியம் ஆகிய உயரிய விழுமியங்களை ஆழமாக உணர்ந்து கொண்டனர்.

கோடையின் தாக்கத்தால் சோர்ந்திருந்த பலருக்கும் தாகம் தீர்த்த இந்தச் சேவை பெரும் நிம்மதியையும் ஆன்மிக மகிழ்ச்சியையும் அளிப்பதாக அமைந்தது.

# அன்னை ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டங்கள்

தஞ்சாவூர் | 06.05.2026
400 பயனாளிகள் | 12 சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தெய்வீக அன்னையாம் அன்னை ஈஸ்வரம்மா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, கும்பகோணம் சமிதியின் சார்பாகப் பல்வேறு ஆன்மிக மற்றும் மனிதநேயச் சேவை நிகழ்ச்சிகள் பக்திப்பூர்வமாகக் கொண்டாடப்பட்டன. தன் பக்தர்களை, குறிப்பாகக் குழந்தைகளை, 'மாதா பிதா குரு தெய்வம்' என்ற உன்னத தத்துவத்தின்படி தாயைக் கடவுளாக மதிக்கும்படி பகவான் அறிவுறுத்துகிறார். அந்த உன்னதப் போதனையைப் பிரதிபலிக்கும் விதமாக, அன்னை ஈஸ்வரம்மா தினத்தன்று அதிகாலை 05:30 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனத்துடன் வழிபாடுகள் மங்களகரமாகத் தொடங்கின.

ஒவ்வொரு ஆண்டும் அன்னை ஈஸ்வரம்மா தினத்தன்று அரசு மருத்துவமனையில் பிறக்கும் பச்சிளம் குழந்தைகளுக்குப் புத்தாடைகள் வழங்குவதைக் கும்பகோணம் சமிதி வழக்கமாகக் கொண்டுள்ளது. அந்த உன்னதமான மரபின்படி, இப்புனித நாளிலும் அரசு மருத்துவமனையில் அன்று பிறந்த

பச்சிளம் குழந்தைகள் அனைவருக்கும் சமிதி அன்பர்களால் புத்தாடைகள் வழங்கி அன்பும் மகிழ்ச்சியும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

மாலையில் 06:15 மணி முதல் பகவானைப் போற்றும் சிறப்பு கூட்டுப் பஜனை பக்திப் பரவசத்துடன் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, பாலவிகாஸ் குரூப் 2 தேர்வில் கலந்துகொண்டு வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு அதற்குரிய சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் நிறைவாக வருகை தந்திருந்த பக்தர்களுக்கும், குழந்தைகளுக்கும் பகவான் பாபாவின் மங்கள ஆரத்தி காட்டப்பட்டு அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.






# பாலவிகாஸ் குருமார்கள் பயிற்சி முகாம்

தஞ்சாவூர் | 31.05.2026 | 60 பயனாளிகள்

பாபாவின் பேரருளால், கொடைக்கானல் மாநில மாநாட்டின் தொடர்ச்சியாகத் தஞ்சாவூர் மாவட்ட குரூப் 1 குருமார்களுக்கான பயிற்சி முகாம் கும்பகோணம் சமிதி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. குரூப் 1 குழந்தைகளுக்குப் புரியும் வகையில் பாடத்திட்டங்களை எளிமையாக நடத்துவது, நவீன கற்பித்தல் முறைகள், மனித விழுமியங்கள் மற்றும் வகுப்புகளை ஈர்ப்புடையதாக மாற்றுவது குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

புதிய குருமார்களும், குரூப் 3 மற்றும் 4 பாலவிகாஸ் மாணவர்களும் இதில் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். குருமார்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு பயனுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

நிறைவாக, அனைவரும் பாலவிகாஸ் சேவையில் தங்களை அர்ப்பணிக்க உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். மங்கள ஆரத்திக்குப் பின் அனைவருக்கும் ஸ்வாமியின் பிரசாதம் வழங்கப்பட்டது.


SRI SATHYA SAI BALVIKAS
5 Teaching Techniques



# முதியோர் இல்ல வருகை

தஞ்சாவூர் | 27,16.05.2026
90 பயனாளிகள் | 4 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் தஞ்சை மஹர்நோன்புசாவடி சமிதி சார்பாக கடந்த 27.05.2026 அன்று வலங்கைமானில் உள்ள முதியோர் இல்லத்தில் சிறப்புச் சேவை மேற்கொள்ளப்பட்டது. அங்கு வசிக்கும் 30 முதியோர்களுக்குச் சாய் அன்பர்களால் அன்போடு அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

இப்புனிதமான சேவையில் 3 சாய் சேவாதளத் தொண்டர்கள் கலந்துகொண்டு தங்களின் அர்ப்பணிப்பான சேவையை வழங்கினர்.

இதன் தொடர்ச்சியாக, கும்பகோணம் சமிதி சார்பாகக் கடந்த 16.05.2026 அன்று ஆதரவற்றோர் இல்லத்திற்கு ஒரு நற்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு தங்கியிருந்த 60 பயனாளிகளுக்குச் சுவையான உணவு சாய் அன்பர்களால் அன்போடு பரிமாறப்பட்டது.

இந்த நாராயண சேவையினை 2 சேவாதளத் தொண்டர்கள் மிகவும் பக்தி உணர்வுடன் மேற்கொண்டனர்.

## நகர சங்கீர்த்தனம்

**திண்டுக்கல்**

**31.05.2026** **11 சேவாதளத்தொண்டர்கள்**

31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 5.20 மணி முதல் 6.30 மணி வரை திண்டுக்கல் மகாலக்ஷ்மி நகர் சமிதியில் நகர சங்கீர்த்தனம் பக்தி பூர்வமாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஆண்கள் 4 நபர்கள், மகிளாஸ் 7 நபர்கள் என மொத்தம் 11 நபர்கள் கலந்து கொண்டு பகவானின் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டு ஆனந்தமடைந்தனர்.



# முப்பெரும் விழா

திண்டுக்கல் | 06.05.2026 | 75 பயனாளிகள்

பகவானின் பேரருளால் திண்டுக்கல் போக்குவரத்து நகர் பாலவிகாஸ் மையத்தில் 06.05.2025 புதன்கிழமை அன்று காலை 11.05 மணி முதல் மதியம் 1.35 வரை, தெய்வீக அன்னை ஈஸ்வரம்பாள் அவர்களின் நினைவு தினத்தினை முன்னிட்டு முப்பெரும் விழா மாவட்ட தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இத்திருநாளில் பாலவிகாஸ் தினம், குரூப் 2 சான்றிதழ் வழங்கும் விழா, மாநில அளவில் நடைபெற்ற திறனாய்வு போட்டியில் வெற்றி பெற்றவருக்கு பாராட்டு மற்றும் பாலவிகாஸ் குருமார்களை கௌரவித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

இதில் குழந்தைகள், பெற்றோர், குருமார்கள், சமிதி பொறுப்பாளர்கள் என 75 பேர்கள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியின் நிறைவாக அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.





# அன்னை ஈஸ்வரம்பாள் தினச் சேவை

திண்டுக்கல் 06.05.2026

60 பயனாளிகள் 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் மே 6ம் தேதி புதன்கிழமை அன்று, நம் ஸ்வாமியின் அன்னையான ஈஸ்வராம்பாள் தினத்தை முன்னிட்டுப் பழனி பாலவிகாஸ் குழந்தைகள், பெற்றோர்கள், குருமார்கள் மற்றும் சாயி அன்பர்கள் இணைந்து பழனி நகராட்சி முதியோர் இல்லம் சென்று சிறப்பு பஜனை செய்தனர். அங்கு இருந்த முதியவர்களிடம் நலம் விசாரித்து நம் ஸ்வாமியின் பிரசாதம் வழங்கினார்கள். பெரியோர்களிடம் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதனை வாழ்வியல் பாடமாக கற்றுக் கொண்டு அதன்படியே நடந்துக் கொண்டனர். இதில் பெற்றோர், குருமார்கள் என 25 பேர்கள் கலந்து கொண்டார்கள்.



# அன்னையர் தின பாத பூஜை

திண்டுக்கல் 10.05.2026
24 பயனாளிகள் 12 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் மே 10 ம் தேதி அன்னையர் தினத்தை முன்னிட்டு, பழனி பாலவிகாஸ் குழந்தைகள் தாங்கள் பெற்றோர்க்கு அவர்களது இல்லத்தில் வைத்து பாத பூஜை செய்தார்கள். இதில் 12 பேர்கள் கலந்து கொண்டார்கள்.



# பாலவிகாஸ் குழந்தைகளுக்கான கோடைகால முகாம்

திருச்சி 01-05.05.2026

திருச்சி மாவட்டம், புதுக்கோட்டைப் பகுதி பெரியார் நகர் சமிதி சார்பில், 01.05.2026 முதல் 05.05.2026 வரை பாலவிகாஸ் குழந்தைகளுக்கான கோடைகால முகாம் நடைபெற்றது. இம்முகாமில் நாள்தோறும் வேதம் மற்றும் பஜனை, பேரிடர் மேலாண்மைப் பயிற்சி, இளம் சாயி சத்சங்கம், குழு விளையாட்டுகள், உழவாரப்பணி, ஓவியம் வரைதல், கழிவுப் பொருட்களிலிருந்து பயனுள்ள பொருட்கள் தயாரித்தல் (மறுபயன்பாடு), நீர்மோர் மற்றும் பானகம் வழங்குதல், நாராயண சேவை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் 15-க்கும் மேற்பட்ட பாலவிகாஸ் குழந்தைகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





# ஈஸ்வராம்பா தினச் சேவை

திருச்சி | 06.05.2026 | 145 பயனாளிகள்

06.05.2026 அன்று ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கே.கே.நகர், கல்லுக்குழி, பிச்சாண்டார் கோவில் மற்றும் புதுக்கோட்டை மெயின் சமிதிகள் சார்பாகப் பல்வேறு சேவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஒரு பகுதியாக, ராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் உள்ள 100 குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்குப் புத்தாடைகள் வழங்கப்பட்டன. மேலும், புதுக்கோட்டை 'நேசக்கரம்' முதியோர் இல்லத்தில் வசிக்கும் 45 முதியவர்களுக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டன.





# இலவச பொது மருத்துவ முகாம்

திருச்சி | 10.05.2026 | 171 பயனாளிகள்

பகவானின் பேரருளால் 10.05.2026 ஞாயிற்றுக்கிழமையன்று, புதுக்கோட்டை மெயின் சமிதி மற்றும் குழிபிறை நகரத்தார் இணைந்து, குழிபிறையில் 100ஆவது இலவச மருத்துவ முகாமினை மிகச் சிறப்பாக நடத்தினர்.

இமுகாமில், ஒன்பது தகுதி வாய்ந்த மருத்துவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு விரிவான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 82 ஆண்கள், 89 பெண்கள் என மொத்தம் 171 பயனாளிகள் கலந்துகொண்டு, தங்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெற்றுப் பயன்பெற்றனர்.

இப்புனிதமான மருத்துவ சேவை முகாமில், ஏழு சாயி சேவாதள உறுப்பினர்கள் கலந்துகொண்டு, நோயாளிகளை வழிநடத்துதல் உள்ளிட்ட அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளையும் கனிவோடு மேற்கொண்டனர்.

# மகிளா தின இரவுச் சிற்றுண்டி சேவை

திருச்சி 19.05.2026

பகவானின் பேரருளால் 19.05.2026 அன்று மகிளா தினத்தை முன்னிட்டு, கீழ்க்கண்ட இடங்களில் இரவுச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

கே.கே. நகர் சமிதியின் சார்பில், 'அன்னை இல்லத்தில்' 200 இட்லிகளும், 'பார்வையற்றோர் இல்லத்தில்' 100 இட்லிகளும் சாம்பார் மற்றும் சட்னியுடன் வீட்டிலேயே தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

கல்லுக்குழி சமிதியின் சார்பில் 259 இட்லிகள் வழங்கப்பட்டன. புதுக்கோட்டை மெயின் சமிதியின் சார்பில், 'நேசக்கரம் முதியோர் இல்லத்தில்' உள்ள 45 நபர்களுக்கு இரவுச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

# நித்திய நாராயண சேவை 6-ஆம் ஆண்டில் அடிவைப்பு

திருச்சி | 06.05.2026

100 பயனாளிகள் | 20 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளினால், திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் ஸ்ரீ சத்ய சாயி ஆன்மீக மையத்தில் நடைபெற்று வரும் 'நித்திய நாராயண சேவை' வெற்றிகரமாக ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இச்சேவை ஆறாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் திருநாளான 06.05.2026 அன்று, 100-க்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு மதிய உணவு பரிமாறப்பட்டது. இந்தச் சிறப்பு சேவையில் 10 சகோதரர்கள் மற்றும் 10 சகோதரிகள் என மொத்தம் 20 சாயி சேவாதல்கள் கலந்துகொண்டு தங்களின் அன்பான சேவையை வழங்கினர்.



# பாலவிகாஸ் விளையாட்டுப் போட்டிகள்

திருப்பூர் | 01.05.2026 | 100 சேவாதளத்தொண்டர்கள்

அன்னை ஈஸ்வரம்மா நினைவு தினமான மே 6 முன்னிட்டு 01-05-2026 அன்று பாலவிகாஸ் குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் திருப்பூர் பி . என் ரோட்டில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சேவா மையம் ராம் நகர் மந்திரில் சிறப்பாக நடைபெற்றன.

இதில் மாணவர்கள் அனைவரும் சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்னும் குழுக்களாக பிரிந்து ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் விளையாடினர்.

முன்னாள் மாநிலத் தலைவர் திரு. ரமணி சாய்ராம் அவர்கள் குழந்தைகளிடம் சிறப்பு உரையாற்றினார்.

இப்போட்டிகளில் 85 குழந்தைகள் பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் சாய் இளைஞர்கள் என மொத்தமாக 100 பேர் கலந்து கொண்டனர்.

# பல்லக்கு சேவை

**திருப்பூர்**

**02,31.05.2026** **120 சேவாதளத்தொண்டர்கள்**

சித்ரா பௌர்ணமிதினத்தை முன்னிட்டு நமது மூத்த சாய் சகோதரர், திரு. சுப்பிரமணியன் சாய்ராம் வசிக்கும் அயோத்தியா நகர் மன்னரையில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பௌர்ணமி விழா தொடங்கி சிறப்பாக நடைபெற்றது. இதில் 60 பேர் கலந்து கொண்டனர்.

வைகாசி விசாக பௌர்ணமி பல்லக்கு சேவை பல்லடம் ரோடு யூனிட் 2 சமிதியின் சார்பில் காட்டுவளவு பகுதியில் அமைந்துள்ள திரு. வெங்கடேஷ் சாய்ராம் இல்லத்தில் 31/5/2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி முதல் 8:00 மணி வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சாயி சகோதர, சகோதரிகள், பாலவிகாஸ் குழந்தைகள் என 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து தெய்வீக அனுகிரகத்தை பெற்றார்கள்.

# முதியோர் இல்ல அன்னை ஈஸ்வரம்மா தினச் சேவை

திருப்பூர் | 02.05.2026 | 25 பயனாளிகள்

ஈஸ்வவராம்மா தினத்தை முன்னிட்டு அனைத்து பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் குருமார்களின் ஒத்துழைப்புடன் 2/5/26 அன்று 5 மணி அளவில் திருப்பூர் குமாரானந்தபுரம் தமிழா முதியோர் இல்லத்தில் சாய் வேதத்துடன் பஜன் நடந்தது. இதில் குழந்தைகள், மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர், குருமார்கள், மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.

குழந்தைகள் மற்றும் குருமார்கள் அவரவர் இல்லத்தில் இருந்து முதியோர் இல்லத்திற்கு தேவையான மளிகை பொருட்கள், உணவு பொருட்கள் கொண்டு வந்து அவர்களுக்கு கொடுத்து, கலை நிகழ்ச்சிகள் மற்றும் முதியோருக்கான விளையாட்டு போட்டிகள் நடத்தினர். முதியோர் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து குழந்தைகளுக்கு ஆசீர்வாதம் அளித்தனர்.

# கண் புரை அறுவை சிகிச்சை முகாம்

திருப்பூர் | 04.05.2026 | 194 சேவாதளத்தொண்டர்கள்

04-05-26 அன்று ராம் நகர் மந்திரில் இலவச கண் புரை அறுவை சிகிச்சை முகாம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 194 பயனாளிகள் பயன் பெற்றனர் 94 பேருக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும் 38 பேர் அறுவை சிகிச்சைக்கு தேர்வாகினர்.





# லட்டு தயாரிக்கும் சேவை

திருப்பூர் | 03.05.2026 | 40 சேவாதளத்தொண்டர்கள்

அன்னை ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு கொடைக்கானலில் உள்ள சாய் ஸ்ருதியில் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட திருப்பூர் மாவட்டத்தில் இருந்து 5000 லட்டுகள் 03-05-2026 அன்று காலை 6.30 மணிக்கு ராம் நகர் மந்திரில் சாய் அன்பர்களால் தயார் செய்யப்பட்டன. இச்சேவையில் சாய் சகோதரர்கள் 15, சாய் சகோதரிகள் 25 என மொத்தம் 40 பேர் கலந்து கொண்டனர்.



# அன்னை ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகள்

**திருப்பூர்** | **03.05.2026** | **350 சேவாதளத்தொண்டர்கள்**

திருப்பூர் மாவட்டத்தில் ஈஸ்வரம்மா தினம் ராம் நகர், சாய் மந்திரில் 3.5.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் அனைத்து சமிதி பாலவிகாஸ் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளுடன் வெகு சிறப்பாக நடைபெற்றன.

முன்னாள் என்.எல்.பி & லிக்விட் லவ் (NLP & Liquid Love) பொறுப்பாளர் திரு. ஜம்புகேஸ்வரன் அவர்கள் துவக்க உரையாற்றினார்.

அதனை தொடர்ந்து பாலவிகாஸ் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாவட்ட தலைவர் குழந்தைகளுக்கு வாழ்த்துரை வழங்கி பரிசுகள் வழங்கினார்.

மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் நன்றி உரையுடன் நிகழ்ச்சியானது இனிதே நிறைவுற்றது.

நிகழ்ச்சியில் சமிதி அமைப்பாளர்கள், பெற்றோர், குழந்தைகள் என 350க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.


ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள்
ஈஸ்வரம்மா தினம்



# ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்பு

திருப்பூர் | 14.05.2026 | 15 பயனாளிகள்

திருப்பூர் மாவட்டம் சத்ய சாய் திறன் மேம்பாட்டுத் திட்டம் சார்பாக பெண்களுக்கான இலவச (இணையத்தில்) ஆங்கிலம் பேசும் பயிற்சி வகுப்பு வியாழக்கிழமை தொடங்கப்பட்டு வாரத்தில் 3 நாட்கள் நடைபெற்று வருகிறது. இதில் வேலைக்கு செல்பவர்கள், கல்லூரி மாணவிகள் சேர்ந்து பயன் பெறுகின்றனர்.

# கோடைகால ஆன்மீக பண்பாட்டு பயிற்சி முகாம்

திருப்பூர்

27,28,29.05.2026

82 சேவாதளத்தொண்டர்கள்

திருப்பூர் மாவட்ட ஸ்ரீ சத்யசாய் பாலவிகாஸ் சார்பில் மே 27, 28 மற்றும் 29 ஆகிய மூன்று நாட்கள் கோடைகால ஆன்மீக பண்பாட்டு பயிற்சி முகாம், பி.என் ரோடு, ராம் நகர், ஸ்ரீ சத்ய சாய் விஹாரில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் மாணவர்களுக்கு உடல் ஆரோக்கியம் மற்றும் உணவு பழக்கம், யோகா மற்றும் மூச்சுப் பயிற்சி, பக்தியும் பண்பும், தினசரி வாழ்வில் மனித மேம்பாட்டு குணங்களை எவ்வாறு கடைப்பிடிப்பது, நேர மேலாண்மை ஆகிய தலைப்புகளின் கீழ் வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றன.

இதில் பயிற்றுவித்த பயிற்சியாளர்கள், குருமார்களின் பணி போற்றத்தக்கது.

இந்த முகாமில் 82 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 3 நாட்களும் பங்கேற்ற குழந்தைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





# ஹோமியோபதி மற்றும் அலோபதி மருத்துவ முகாம்

திருப்பூர் | 07,14,21,28.05.2026 | 99 பயனாளிகள்

ஒவ்வொரு வியாழன் தோறும் மாலை 5 முதல் 6 வரை நடக்கும் ஹோமியோபதி மற்றும் அலோபதி மருத்துவ முகாம்களில் திரளான பயனாளிகள் பங்கு கொண்டு பயன் பெறுகின்றனர். இம்மாதம் 99 பேர் பயன்பெற்றனர்.





# அன்னை ஈஸ்வரம்மா தின முப்பெரும் வழிபாடுகள்

தூத்துக்குடி 06.05.2026
20 பயனாளிகள் 40 சேவாதளத்தொண்டர்கள்

தெய்வீக அன்னையாம் ஈஸ்வரம்மா தினத்தன்று - மே 6-ஆம் தேதி காலை 5.45 மணி அளவில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி டவுன் செண்பகவல்லி அம்மன் கோயிலில் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகர சங்கீர்த்தனம் சிறப்பாக நடைபெற்றது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள் 15 பேரும், பெரியவர்கள் 20 பேரும் கலந்து கொண்டனர்.

பிறகு, குழந்தைகள் அவரவர் வீட்டில் இருந்தே அவரவர் பெற்றோர்க்குப் பாத பூஜை செய்தனர். இதனைத் தொடர்ந்து மாலை 6 மணி அளவில் சமிதியில் வைத்து பஜனை நடைபெற்றது.

இதில் பெற்றோர் 20 பேரும், குழந்தைகள் 15 பேரும் கலந்து கொண்டனர். பஜனையைத் தொடர்ந்து குழந்தைகள் அவரவர் பெற்றோர்க்குப் பரிசு கொடுத்து மகிழ்ந்தனர்.



## பாலவிகாஸ் குழந்தைகளின் கலாச்சார நிகழ்ச்சி

தேனி 06.05.2026

நமது பகவானின் பேரருளால் தேனி மாவட்டம் பெரியகுளம் சேவா சமிதியில் 06.05.2026 அன்று பால விகாஸ் குழந்தைகளின் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் குழந்தைகளுக்கு பரிசு பொருட்களும் வழங்கப்பட்டன.

# இலவச காலனி பாதுகாப்பு சேவை

**தேனி** **26.05.2026**

நமது பகவானின் பேரருளால் 26.05.2026 அன்று பெரியகுளம் சேவா சமிதியின் சார்பாக வடகரை பெரியகுளம் கோயிலில் இலவச காலணி பாதுகாப்பு சேவை நடைபெற்றது. இதில் தேனி சமிதியின் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்துகொண்டு தங்களின் அன்பான சேவையை வழங்கினர்.



# திருவிளக்கு பூஜை

**தேனி** **25.05.2026**

நமது பகவானின் பேரருளால் 25.05.2026 அன்று போடிநாயக்கனூர் சேவா சமிதியில் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் தேனி சமிதியின் ஆண்கள், பெண்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் அனைவரும் திரளாகக் கலந்துகொண்டு பகவானின் தெய்வீக அருளைப் பெற்றனர்.

## அன்னை ஈஸ்வரம்மா தின கலை நிகழ்ச்சிகள்

விருதுநகர் | 06.05.2026
80 பயனாளிகள் | 60 சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு ஸ்வாமியின் அருளால் கடந்த மே 6ம் தேதி விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் சமிதியில் மாத்ரு பூஜை மிக சிறப்பாக நடைப்பெற்றது. பாலவிகாஸ் குழந்தைகள் காலை 9.00 மணிக்கு சமிதிக்கு வந்து தங்கள் பெற்றோருக்குப் அட்சதையால் பாத பூஜை செய்து வழிபட்டனர்.

தொடர்ந்து, அங்கிருந்தவர்கள் சாயி அன்னை குறித்த கதைகளைக் கேட்டுப் பயன் அடைந்தனர். அதனைத் தொடர்ந்து விநாயகர் பாடலுக்கு நடனம், நரசிம்மர் பிரகலாதன் நாடகம், முருகன் நடனம், ‘அனைவரையும் நேசி அனைவருக்கும் சேவை செய்’ (Love all Serve all) என்ற தலைப்பில் நாடகம், பரதநாட்டியம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட குழந்தைகள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது. பெற்றோர்கள், குழந்தைகள், குருமார்கள்

மற்றும் சேவாதள அன்பர்கள் அனைவரும் மிகவும் ஆர்வமுடன் கலந்துகொண்டு, சாயி பிரசாதம் பெற்று மகிழ்வுடன் வீடு திரும்பினர்.



# சேவா வாணி

எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக

**ssssotnreporting@gmail.com**

முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

### முக்கிய இணைப்புகள்

**ஸ்ரீ சத்ய சாய் தமிழ்**

Sri Sathya Sai Media Centre

**ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)**

**தமிழ்நாடு - தெற்கு**